விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 14 சனிக்கிழமை (31.10.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 316

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# மதத் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு!

## ஜெனிவா பிரேரணை குறித்து

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகள் மற்றும் அதன் சவால்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்களுக்குமிடையிலான ஒரு விசேட சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தொடர் பாகவும் ஜனாதிபதி மதத் தலைவர்களுக்கு விளக்கமளித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரி தாய்லாந்து விஜயம்



(கொழும்பு)

இலங்கைக்கும் தாய்லாந்துக்கு

24ஆம் பக்கம் பார்க்க....

## அனைவருக்கும் இழப்பீடு சோமவன்ஸ கோரிக்கை

(கொழும்பு)


இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரினால் பாதிக்கப் பட்ட அனைவருக்கும் இழப்பீடு வழங்குமாறு சோமவன்ஸ அமரசிங்க அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜே.வி.பி. யின் முன்னாள் தலை

24ஆம் பக்கம் பார்க்க....

## மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியவில்லை!

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



(மன்னார்)

மக்கள் தொடர்ந்து வீடுகள் கேட்கின்ற போது அதனை கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது இலங்கை அரசாங்கம 65 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தருவதாக கூறியுள்ளது. அவ்வாறு ஏற்படின மக்களின் அந்த பிரச்சினை

24ஆம் பக்கம் பார்க்க....

## வெலே சுதா மீண்டும் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள வெலே சுதா என்றழைக்கப்படும் கம்பொல விதானகே சமந்த குமார நீதிமன்றத்தில் மீண்டும் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

நிதி மோசடி சட்டத்தின் கீழ் இரகசிய பொலிஸாரினால் கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிட்டிய முன்னிலையில் வெலே சுதா ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கு மீதான விசாரணை

24ஆம் பக்கம் பார்க்க....

## பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் தாக்கவே இல்லை

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் பல்கலைக்கழக மாணவர்களை தாக்கவேயில்லை என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்கள் போலியானவை என்றும், மாணவிகள் கீழே விழுந்திருந்த நிலையில் அவர்கள் எழுந்திருக்க பொலிஸார் உதவிசெய்த சம்பவங்கள் தொடர்பான புகைப்படங்களும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக மேற்கொள்ளப்படும் பொய்ப்பிரசார

24ஆம் பக்கம் பார்க்க....


24 ஆம் பக்கம் பார்க்க....

பாகவும் ஜனாதிபதி மதத் தலைவர்களுக்கு விளக்கமளித்தார்.

23 ஆம் பக்கம் பார்க்க....

# மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியவில்லை!

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



(மன்னார்)

மக்கள் தொடர்ந்து வீடுகள் கேட்கின்ற போது அதனை கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது இலங்கை அரசாங்கம 65 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தருவதாக கூறியுள்ளது. அவ்வாறு ஏற்படின மக்களின் அந்த பிரச்சினை

24 ஆம் பக்கம் பார்க்க....

# வெலே சுதா மீண்டும் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள வெலே சுதா என்றழைக்கப்படும் கம்பொல விதானகே சமந்த குமார நீதிமன்றத்தில் மீண்டும் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

நிதி மோசடி சட்டத்தின் கீழ் இரகசிய பொலிஸாரினால் கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிட்டிய முன்னிலையில் வெலே சுதா ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கு மீதான விசாரணை

24 ஆம் பக்கம் பார்க்க....

# பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் தாக்கவே இல்லை

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் பல்கலைக்கழக மாணவர்களை தாக்கவேயில்லை என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்கள் போலியானவை என்றும், மாணவிகள் கீழே விழுந்திருந்த நிலையில் அவர்கள் எழுந்திருக்க பொலிஸார் உதவிசெய்த சம்பவங்கள் தொடர்பான புகைப்படங்களும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக மேற்கொள்ளப்படும் பொய்ப்பிரசார

24 ஆம் பக்கம் பார்க்க....

# ஆணைக்குழு முன் மகிந்த ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்றும் ஆஜராகியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு சுமார் 200 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுத்தியமை

24 ஆம் பக்கம் பார்க்க....

# முஸ்லிம்களுக்கு விரைவில் தீர்வு!

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம மக்களுக்கு தீர்வு வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

உண்மை, நீதி, இழப்பீடு மற்றும மீள உருவாகாமை தொடர்பிலான பொறிமுறையில் முஸ்லிம் சமூகமும் ஓர் முக்கியமான பங்குதாரர்கள் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

உள்ளக விசாரணை மற்றும் தீர

24 ஆம் பக்கம் பார்க்க....

# புலிகளின் பெயரைச் சொன்னால் அரசாங்கம் என்னை விட்டு வைக்காது

## விக்கிரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

தான் விடுதலைப் புலி உறுப்பினர் அல்லவெனத் தெரிவித்துள்ள நவ சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன, தமிழ் மக்களின் சாதாரண கோரிக்கைகளுக்காக குரல் கொடுக்கும் அரசியல் கட்சியின் உறுப்பினரே எனக் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

24 ஆம் பக்கம் பார்க்க....

# யாழில் தொற்றுநோய் திடீரென அதிகரிப்பு

## எச்சரிக்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

தற்போது மழைகாலம் ஆரம்பித்திருப்பதனால் வயிற்றோட்டம் மற்றும் வயிற்றுழைவு போன்ற நோய்கள் அதிகரித்து வருவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.நந்தகுமாரன் எச்சரித்துள்ளார்.

சுட்டாறிய குடிநீரினை பருகுவதன் மூலம் இவ்வாறான நோய்களின் தாக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வருடத்தில் இதுவரை 512 பேர் வயிற்றுழைவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஜனவரி மாதம் 33 பேரும்,

24 ஆம் பக்கம் பார்க்க....

# மனித உரிமை குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிசார் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதல் குறித்து உலமா கட்சி ஏற்பாட்டில் ஜாதிக பலய அமைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

இலங்கையின் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்துக் கட்சிகள் ஒன்றிணைந்து அண்மையில் ஜாதிக பலய எனும் கூட்டமை

23 ஆம் பக்கம் பார்க்க....

# ஏழு மணி நேரம் காத்திருப்பு விசாரணை எதுவும் இல்லை!

## முன்னாள் ஜனாதிபதி சீற்றம்

(கொழும்பு)

ஏழு மணித்தியாலங்கள் காத்திருந்த போதிலும் விசாரணை எதுவும நடத்தப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின

24 ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## நடராசா பரமேஸ்வரி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பரமேஸ்வரி நேற்று (30.10.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, புஸ்பமலர், உருத்திரசிங்கம் மற்றும் குணபாலசிங்கம், தனபால சிங்கம் (சுவிஸ்), சறோஜினிதேவி (பணிப்பாளர் திவிநெகும, வவுனியா), அம்பிகை (ஜேர்மன்), அம்பாலிகை, பவானி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் கெகராசா, சிவபாலசுப்ரமணியம் (ஜேர்மன்), பத்மரஞ்சன் (வவுனியா கிராம சேவையாளர்), மேனன், புனிதராசன் (ஜேர்மன்), பிறேமா தர்மா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சரஸ்வதி, யோகம்மா மற்றும் பற்பனா, கமலாதேவி, இலங்காதேவி, பரஞ்சோதி, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், செல்லையா, தர்மலிங்கம், பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி மற்றும் ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனியும், பாமினி (ஜேர்மன்), தர்சினி (பிரான்ஸ்), பிறேமளா, நிசாந்தன், டினோஜா, நிசாந்தினி, ஜெனனி, கஸ்தூரி, தாமிரர், திமேத், சொலமன், ரிசான், நிரோஸ், திவ்யா, பிரசாந், ரம்யா, பிரஜித், அனோஜித் ஆகியோரின் பேர்த்தியும், சுபானு, மாதவன், சியாம், அபர்னிகா, அபர்னன், அர்ச்சயன், சஜித், சஞ்சயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கிழக்கிலுள்ள கட்டை ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமகிருஷ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(சி-2575)

தகவல்:-மகன்
ந.குணபாலசிங்கம்
(கடவுள்) குடும்பத்தினர்.

# 10 ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திரு. கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்



தோற்றம்
1942-09-20

மறைவு
2005-10-31

குடும்பத்தின் ஒளிவிளக்காய் - அன்பின்
இருப்பிடமாய் நற்பண்புகளுடன் - நல்
வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே
வாழ்ந்த அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுடன்
என்றும் வாழ்கின்றோம்.

18, கதிரவேல் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(1397)

நினைவால் வாடும்
சகோதரி, மருமக்கள்.

# 28 ம் ஆண்டு நினைவலைகள்

## அமரர். திருமதி சர்வேஸ்வரரூபி சர்வானந்தம்

சிருஷ்டிகளுக்காக
21-09-1947

சிருஷ்டிகருக்காக
10-11-1987

திதி :- அபரபக்ஷ பஞ்சமி ஐப்பசி



எங்களை தவிக்கவிட்டு ஓடி
மறைந்து ஆண்டுகளோ இருபத்தெட்டு
உங்கள் பாசமுகத்தை நாம்
தேடி அலைந்தோ திக்கெட்டும்
உன் நினைவுகளோ
யுகம் மட்டும்.

(2199)

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

என்றென்றும் பாசமுடன்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார்.

# நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி



எமது வித்தியாலயத்தின்
ஆரம்ப பிரிவு ஆசிரியர்
திருமதி விஜிதமலர் சில்வெஸ்ரர்
அவர்களது அன்பு மாமியார்
**திருமதி சிறில்டா கிறிஸ்தோப்பர்**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினரின் துயரில்
பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவன்
பாதத்தில் இளைப்பாற வேண்டி
பிரார்த்தித்து நிற்கின்றோம்.


(1396)

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# மரண அறிவித்தல்

## தெய்வகடாட்சம் தேவதாஸ்



துன்னாலையை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தெய்வகடாட்சம் தேவதாஸ் 29.10.2015 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வகடாட்சம் மற்றும் பூரணேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், ஸ்ரீரங்கராஜா-கமலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், நித்தகலாவின் அன்புக் கணவரும், வருணியாவின் பாசமிகு தந்தையும், புவனேந்திரன், ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.10.2015 இன்று சனிக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் கியான்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானன்ற காடு,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(சி-2574)

தகவல்:-
குடும்பத்தினர்.

# மாகாண கல்வி அமைச்சு, வட மாகாணம்

**பாடசாலை மாணவர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்.**

தலைவர், அமைச்சு பெறுகைகள் குழு (MPC) மாகாண கல்வி அமைச்சு வட மாகாணம் பாடசாலை மாணவர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்.

**Bid No - NP/03/03/fII/S.F/2015 (Type -I,II)**
**(B.S 50000)**

| தொ. இல | பொருள் விபரம் | தேவையான தளபாடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Students steel desk table - Type-01 | 1300 |
| 2. | Students steel desk table - Type-02 | 1400 |
| 3. | Students steel Chair Type - 01 | 1300 |
| 4. | Students steel Chair Type - 02 | 1400 |

**Bid No - NP/03/03/fII/S.F/I 2015 (Type -III,IV)**
**(B.S 50000)**

| தொ. இல | பொருள் விபரம் | தேவையான தளபாடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Students steel desk table - Type-03 | 1230 |
| 2. | Students steel desk table - Type-04 | 1250 |
| 3. | Students steel Chair Type - 03 | 1230 |
| 4. | Students steel Chair Type - 04 | 1250 |

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்விப்பத்திரங்களையும் அலுவலகநேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் ( 021 205 4095) எமது அமைச்சில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
2. இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் வியாபாரப் பதிவுச் சான்றிதழ், கேள்விப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதம் என்பவற்றினை சமர்ப்பித்து ஒவ்வொரு விலைக் கேள்விப்பத்திரத்திற்கும் ரூபா 1, 000 மீளளிக்கப்பட முடியாத கேள்வி வைப்புப் பணத்தினை காசாக செலுத்தி அலுவலக நாட்களில் 30.10.2015 ம் திகதி தொடக்கம் 20.11.2015 ம் திகதி வரை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரையான அலுவலக நேரங்களில் எமது அமைச்சில் பெற்றுக் கொள்ளலாம்.
3. விலைக் கேள்விப்பத்திரங்கள் 20.11.2015 ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாக இவ் அமைச்சில் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கான நேரம் முடிவடைந்த உடனேயே விலைக்கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

திரு.இ.இரவீந்திரன்
தலைவர் – பெறுகைக்குழு
மாகாண கல்வி அமைச்சு,
வடமாகாணம்
செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(2571)

# சந்திரிகாவுக்கு எதிரான விளம்பரத்துக்காக பாரிய தொகையை செலவிட்ட மகிந்த தரப்பு



கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு எதிரான விளம்பரங்களுக்கு மகிந்த தரப்பு பாரிய தொகையொன்றைச் செலவிட்டுள்ளது.

பாரிய மோசடிகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளின்போது நேற்று முன்தினம் இது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை மிஸ்டர் பிரபாகரன் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனை வைத்து சிங்கள மக்கள் மத்தியில் மைத்திரி- சந்திரிகா தரப்புக்கு எதிரான வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சந்திரிகாவின் உரையிலிருந்து மிஸ்டர் பிரபாகரன் என்ற வார்த்தைகள் அடிக்கடி தொலைக்காட்சி விளம்பரங்களாக ஒளிபரப்பப்பட்டிருந்தது. இந்நிலையில் பாரிய மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த சுயாதீன தொலைக்காட்சியின் உள்ளகக் கணக்காளர் அலகியவன்ன, சந்திரிகாவுக்கு எதிரான குறித்த விளம்பரங்களுக்காக மகிந்த தரப்பு பாரிய தொகையொன்றைச் செலவிட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். (இ-7-10)

# நெல்லியடியில் பாரிய திருட்டு சந்தேக நபர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி- நெல்லியடிப் பகுதியில் உளள நகைக கடையை உடைத்து தங்க நகைகளை திருடிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் கொழுமபு- கந்தானைப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபரினை எதிர் வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா நேற்றைய தினம உத்தர விட்டுள்ளார்.

மேற்படி திருட்டுச் சம்பவம் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இடம் பெற்றது. நகைக்கடையின் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் காட்சிப்படுத்தப்பட்ட 10 இலட்சம் ரூபா நகைகளை திருடிச் சென்றனர்.

இத்திருட்டுச்சம்பவம் தொடர்பாக நகைக்கடை உரிமையாளரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து இத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் களை கண்டுபிடிக்கப்பட விசேட பொலிஸ் குழுவொன்று அமைக்கப் பட்டது.

இந்நிலையில் கொழும்பு- கந் தானை பகுதியில் உள்ள பிரபல நகைக்கடையொன்றில் தங்க நகை கள் விற்கச் சென்ற நபரொருவர் கந்தானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற தகவல் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நெல்லியடி பொலிஸார் நகைக்கடை உரிமையாளரை அழைத்துக்கொண்டுகந்தானைபொலிஸ் நிலையம் சென்றனர்.

நகைக்கடை உரிமையாளரால் நகைகள் அடையாளம் காட்டப்பட்ட தையடுத்து அச் சந்தேக நபர் நெல் லியடி பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்டதுடன் தங்க நகைகளும் பொலிஸாரால் எடுத்து வரப்பட்டது.

பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்குட் படுத்தப்பட்ட அச் சந்தேகநபர் நேற்றையதினம் பருத்தித் துறை நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இதனையடுத்து சந்தேக நபரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-5-60)

# கல்வியில் அரசியல் தலையீடுகள் இல்லாவண்ணம் பாதுகாக்கப்படும்

## கல்வி அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

கடந்த காலங்களைப் போன்று நாட்டின் கல்வித் துறையில் அரசியல் தலையீடுகள் இல்லாவண்ணம் தாம் பாதுகாப்பதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கடந்த 28 ஆம் திகதி கொழும்பு நாலந்தா கல்லூரியில் இடம்பெற்ற பரிசு வழங்கல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் கல்வியியல் முறைகளில் அரசியல் தலையீடுகள் இருந்தமையே தற்போது கல்வித் துறையிலும் ஏற்படும் பெரும் முரண்பாடுகளுக்கு காரணமாகியுள்ளது எதிர் காலத்தில் இவவாறான அரசியல் தலையீடுகள் இல்லாத கல்விச் சூழலை ஏற்படுத்தி அதன் பிரதி பலனை மாணவர் சமுதாயம் 30 வருடங் கள் அல்லது ஐம்பது வருடங் கள் வரையில் அனுபவிக் கும் வகையிலான சிறந்த திட்டங்களை வகுப்பதே எமது நோக்கமாகவும் உள்ளது.

நாட்டில் கல்வித்துறை புதுப்பிக்கப்படாததால் கல்வி, தொழில்துறை, பொருளாதார துறை ஆகியன வெவ்வேறு பிரிவுகளாக உள்ளன. உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகள் கல்வித் துறையை புதுப்பித்துள்ளது போன்று எமது நாட்டில் கல்வியில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்த தேவையான அதிகாரங்களை தற்போதும் அரசாங்கம் தேசிய கல்வி நிறுவகத்திற்கு வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் கல்வித் துறையில் மேற்கொள் ளப்பட்ட அத்தியாவசிய மாற்றங்கள் தொடர்ந்தும் பாதுகாக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சிகை அழகக சம்மேளனத்தின் முக்கிய அறிவிப்பு

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வடமாகாண சிகை அழ கக சங்கங்களின் சம்மேளனம் 3.11.2015 தொடக்கம் 9.11.2015 வரை நிலையம் மூடும் நேரக் கட்டுப்பாட்டை தளர்த்தியுள்ளதோடு 8.11. 2015 ஞாயிறு விடுமுறையை இரத்து செய்து நிலையம் திறக்க அனுமதியை வழங்கியுள்ளது.

தீபாவளி பண்டிகை அன்று சம்மேளனத்தின் பொது விடுமுறை தினமாகும் என்பதையும் வடமாகாண நிலைய உரிமையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம் என சம்மேளனத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (இ

# ஆசிரியையை படுகொலை செய்த மாணவனுக்கு மரண தண்டனை!

(கொழும்பு)

தனக்குக் கற்பித்த ஆசிரியையின் வீட்டுக்குச் சென்று, அவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு கொலை செய்ததாகக் கூறப்படும், மாணவனைக் குற்றவாளியாக இனங்கண்ட மாத்தறை மேல் நதிமன்றம், அவருக்கு நேறறு முன்தினம் வியாழக்கிழமை மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

மாத்தறையில் உள்ள அவரது வீட்டில் கொள்ளையடிப்பதற்காகச் சென்றிருந்த போதே, அவர், ஆசிரியையைப் படுகொலை செய்திருந்தார். 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மாத்தறை கொமங்கொட மல்காந்தி ராஜபக்ஷ யாப்பா (வயது- 52) என்ற ஆசிரியையே பலியானார். இந்த சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஆசிரியையிடம்கல்விகற்ற பீ.ஜி. மஹேந்திர பிரதீப் (வயது- 32) என்பவருக்கே மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடிப்பதற்காக ஆசிரியையின் வீட்டுக்குள் நுழைந்த போது, ஆசிரியை தன்னைக் கண்டுகொண்டதால், தான், அவரை படுகொலை செய்ததாக வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தவர் ஏற்கனவே, வாக்குமூலம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கப் பொதுக்கூட்டம்

வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்ற 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு அருகாமையிலுள்ள கலாசார மண்டபத்தில் சங்கத் தலைவர் த.ஜெபதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ

# பல்கலைக்கழக மாணவர்கள் 39பேருக்கும் பிணை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 39 பல்கலைக்கழக மாணவர்களை தனிநபர் மற்றும் சரீர பிணைகளில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிட்டிய நேற்று உத்தர விட்டுள்ளார்.

இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்பாக பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்றைய தினம் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் ஏற்பட்ட வாகன நெரிசலை குறைப்பதற்காக மாணவர்களை கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து மாணவர்களை கலைப்பதற்காக நீர்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்தே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 39 மாணவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மாணவர்கள் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே மாணவர்களுக்கு பிணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பொலிஸாருக்கு எதிராக குவியும் முறைப்பாடுகள் ஆணைக்குழு திண்டாட்டம்

பொலிஸாருக்கு எதிரான பொதுமக்களின் முறைப்பாடுகள் குவியும் நிலையில் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு பெரும் திண்டாட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

தேசிய அரசாங்கம் முன்வைத்த 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் ஊடாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டு, தற்போது செயற்படத் தொடங்கியுள்ளது.

சுயாதீன பொலிஸ்ஆணைக்குழு கொழும்பை மையமாகக் கொண்டு செயற்பட்ட போதிலும், அதன் அலுவல்களை இலகுபடுத்தும் நோக்கில் இலங்கையின் பல்வேறு பாகங்களில் ஒன்பது கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரம் நிறைவு பெறாத நிலையில் பொலிஸாரின் முறைகேடான நடத்தைகள் குறித்து நூற்றுக்கணக்கான முறைப்பாடுகளை பொதுமக்கள் மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் பொலிஸ் ஆணைக்குழு முன்னுள்ள ஏனைய பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, பொது மக்களின் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் நிர்ப்பந்தம் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. (இ-7-10)

# பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு சிகிச்சை விடுதி அமைக்க முடிவு

## உதவி வழங்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை சமூகத்தினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கென புனர் வாழ்வு சிகிச்சை விடுதி அமைப்பதற்கு நிதியுதவி வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் என்.சத்தியமூர்த்தி, நரம்பியல் நிபுணர் அஜினி அரசலிங்கம் ஆகியோர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்புனர்வாழ்வு சிகிச்சை விடுதி அமைக்கப்படுவதன் மூலம் பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் பூரண சிகிச்சையினைப் பெற்று நோயிலிருந்து மீள முடியும்.

வடக்கில் 10 ஆயிரம் பேர் வரையில் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகையினால் இப்புனர்வாழ்வு சிகிச்சை விடுதி அமைக்கப்படுவது அவசியமாகும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்ட கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

பாரிசவாதத்தினால் உச்ச அளவில் பாதிக்கப்பட்டவர்கள் கைகால்கள் இயங்கா நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களிற்கு தனியே மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்க முடியாது.

உடற்பயிற்சி மற்றும் பேச முடியாதவர்களிற்கு பேச்சு பயிற்சி ஆகியன வழங்கப்படவேண்டும்.

பாரிசவாதத்திற்கென தனியான சிகிச்சை விடுதி யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லாத நிலையில் இதனை இங்கு மேற்கொள்ள முடியாது.

வடக்குமாகாண சுகாதார அமைச்சும், யாழ்.பிராந்திய சுகாதார திணைக்களமும் பாரிசவாத புனர்வாழ்வு சிகிச்சை நிலையம் அமைக்கப்படுவதற்கு தேவையான நிலமொன்றினை சாவகச்சேரியில் கையளித்துள்ளனர்.

ஆகையினால் இந் நிலையத்தில் புனர்வாழ்வு சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு தேவையான பங்களிப்பினை வழங்க புலம்பெயர் மக்கள் , செல்வந்தர்கள் மற்றும் உதவி வழங்க விரும்புவோர் முன்வரல் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் பாரிசவாத சிகிச்சைக்கென தனியான விடுதியொன்றினை அமைப்பதற்கான கலந்துரையாடல்களினை சுகாதார அமைச்சிடம் மேற்கொண்டு வருவதாக பணிப்பாளர் சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்தார். (இ-4)

## 20 துப்பாக்கிகள் திடீரென மாயமாகின

(கொழும்பு)

காலி துறைமுகத்தில் சோதனையிடப்பட்ட அவன்கார்ட் கப்பலில் இருந்த 816 துப்பாக்கிகள், இலங்கை இராணுவம் ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்திற்கு விற்பனை செய்த ஆயுதங்கள் என பாரிய ஊழல் மற்றும் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் விசாரணையாளர், அவன்கார்ட் ஆயுத கப்பலை சோதனையிட்டு விசாரணை நடத்தியுள்ளனர்.

அத்துடன் கப்பலில் இருந்த 20 துப்பாக்கிகள் காணாமல் போயுள்ளன. மேலும் கப்பலில் கண்டுபிடிக்கப்பட்ட 59 துப்பாக்கிகள் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு கூறியுள்ளது.

காலி துறைமுகத்திற்கு அருகில் கடற்படையினரால் கைப்பற்றி, பரிசோதனை நடத்திய பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவன்கார்ட் கப்பலை ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையாளர்கள் நேற்று முன்தினம் சோதனையிட்டதுடன் நேற்று மூன்றாவது நாளாகவும் அது குறித்து விசாரணை நடத்தியிருந்தனர். (எ-11)

## வட மாகாண விளையாட்டு வவுனியாவுக்கு மாற்றம்

மழை காரணமாக வட மாகாண விளையாட்டு விழா இடம்மாற்றப்பட்டுள்ளதாக வட மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா நகர சபை மைதானத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்ட குறித்த தொடர், மழையினால் ஏற்பட்ட மைதானத்தின் சீரற்ற தன்மையின் காரணத்தினால் வவுனியா கல்வியியற் கல்லூரி மைதானத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (க)

## தோலுடன் இறைச்சி, தீக்குச்சி கொத்துப் பார்சலில் மீட்பு

### உரிமையாளருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதியில் தோலுடன் இறைச்சி மற்றும் தீக்குச்சி ஆகியவற்றுடன் உணவு விற்பனை செய்த உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டம் மற்றும் 10ஆயிரம் ரூபாய் வாடிக்கையாளருக்கு நஷ்ட ஈடும் வழங்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த உணவகத்தில் கொத்து ரொட்டி வாங்கிய வாடிக்கையாளர் ஒருவரின் பாசலில் தீக்குச்சி மற்றும் தோலுடன் இறைச்சி ஆகியன காணப்பட்ட நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த வர்த்தகர் மீது யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், வர்த்தக நிலைய உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த நீதிபதி பெ.சிவகுமார், கொத்து ரொட்டி கொள்வனவு செய்த வாடிக்கையாளருக்கு 10ஆயிரம் ரூபாய் நஷ்டம் வழங்குமாறும் நீதிபதி பணித்துள்ளார். (எ-11)

## உதவி மதுவரி ஆணையாளர் நேற்று கைதானார்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண உதவி மதுவரி ஆணையாளர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலுவலகத்தில் வைத்து இலஞ்சம் பெற்றதாக குற்றம் சாட்டி நேற்றையதினம் இவரை கைது செய்த லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு பின்னர் கோப்பாய் பொலிஸாரினால் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கொழும்பிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

குறித்த நபரின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டு அழைத்து செல்லப்பட்டுள்ளார். (எ-9)

# கிளைமோர் தாக்குதல் குற்றச்சாட்டு ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

## மேல் நீதிமன்ற நீதிபதி ஏற்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பருத்தித்துறை நாவலடி பிரதேசத்தில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தி இராணுவ சிப்பாய் திசாநாயக்க என்பவரைக் கொலை செய்த தாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரியினால் அளிக்கப்பட்டதாகக் கூறி, சமர்ப்பிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் நிராகரித்துள்ளார்.

இந்தக் கொலை வழக்கில் எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஒரேயொரு ஆதாரமாகிய ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டதையடுத்து, இந்த வழக்கை தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்பதுபற்றி அறிவிக்குமாறு அரச சட்டத்தரணிக்கு அவகாசம் வழங்கி வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்துள்ளார்.

பருத்தித்துறை நாவலடி பிரதேசத்தில் சுற்றுக்காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது கிளைமோர் கண்ணிவெடி தாக்குதல் நடத்தி, இராணுவ சிப்பாய் திசநாயக்காவைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டி, சட்டமா அதிபரினால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், இரத்தினம் பூபாலபிள்ளை அல்லது பூபால் மாமா என்பவருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் எதிரியினால் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மாத்திரமே வழக்கை நடத்துவதற்கான ஆவணமாகப் பதிவிலக்கமிட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

எதிரியினால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்ததாகக் கூறி நீதிமன்றத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் பொன்சேகா சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் எதிரியான இரத்தினம் பூபாலபிள்ளையை அழைத்து, அவருடைய தேவையைப் பூர்த்தி செய்யுமாறு பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் எனக்கு உத்தரவிட்டார். அதன்படி, எதிரியை அழைத்து கேட்டபோது, அவர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். இதனையடுத்து, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பான சட்ட திட்டங்களை விளங்கப்படுத்திய பின்னர், அவருடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்தேன். எனக்கு தமிழ் மொழி தெரியாது. அதேநேரம், எதிரிக்கு சிங்கள மொழி தெரிந்திருக்கவில்லை. எனவே எங்கள் தொடர்பில் எதிரி தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது,

இந்த உதவி பொலிஸ் அத்தியட்சகரை நான் காணவே இல்லை. அவருக்கு நான் எந்தவிதமான குற்ற ஒப்புதல் வாக்குமூலமும் வழங்கவில்லை. இங்கு சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலத்திற்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி ஓமந்தையில் வைத்து படையினர் என்னைக் கைது செய்தார்கள். கொலை நடந்ததாகக் கூறப்படுகின்ற 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் நான் வன்னியில் இருந்தேன். ஆனால், 2007ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி பருத்தித்துறை நாவலடி பகுதியில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவத்தில் என்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் வன்னியில் இருந்து எவரும் பருத்தித்துறை பகுதிக்கு சுதந்திரமாகச் செல்ல முடியாது.

அதேநேரம் சம்பவம் நடந்து இரண்டு வருடங்களின் பின்பே என்னைக் கைது செய்து என்மீது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தக் கொலைக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என தெரிவித்தார்.

இரு தரப்பு சாட்சியங்களையும் செவிமடுத்த நீதிபதி இளஞ்செழியன், இந்த கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய விடயங்களை ஆய்வு செய்ததாகத் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

நீதிமன்றத்தில உதவி பொலிஸ் அத்தியட்சகர் அளித்த சாட்சியத்தில், அவருக்குப் பணிப்புரை வழங்கியதாகக் குறிப்பிட்ட பயங்கரவாதத் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் யார்? அவருடைய பெயர் என்ன? எதிரி அந்தப் பணிப்பாளரிடம் தெரிவிக்க விரும்பியிருந்த தகவல் என்ன? எதிரியின் விருப்பத்தை அல்லது தேவையை அந்தப் பணிப்பாளரிடம் கொண்டு சென்றவர் யார்? என்பது போன்ற எந்த விடயமும் தெளிவுபடுத்தப்படவில்லை. எதிரியிடமிருந்து பெற்றதாகக் கூறப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலம் சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட விடயங்கள் உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் எண்பிக்கப்படவில்லை.

எதிரி உதவி பொலிஸ் அத்தியட்சகர் அளித்த சாட்சியத்தை மறுத்துரைத்துள்ளார். எதிரி தனது சாட்சியத்தில் கொலைச் சம்பவம் நடைபெற்றபோது, தான் வன்னியில் இருந்ததாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் சம்பவம் நடைபெற்று இரண்டு வருடங்களின் பின்னர் ஓமந்தையில் வைத்தே தன்னைக் கைது செய்ததாகவும் எதிரி தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் ஒரேயொரு ஆவண சாட்சியமாகிய எதிரி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது என நீதிபதி தெரிவித்தார்.

அத்துடன், இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்பதை அடுத்த தவணையில் தெரிவிக்க வேண்டும் என்று அரச தரப்பு சட்டத்தரணிக்கு அவகாசம் வழங்கி வழக்கை நீதிபதி இளஞ்செழியன் எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இந்த வழக்கில் அரச தரப்பில் செல்வி சுகந்தி கந்தசாமியும் எதிரி தரப்பில் சட்டத்தரணி சிறிகாந்தாவும் முன்னிலையாகியிருந்தனர். (எ-4)


### கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் பணிமனையில் 16.11.2015ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பிரதான உணவகம்-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2000/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- உம் தனித்தனியாகப் பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (க-2572) 31.10.2015



### விற்பனை பிரதிநிதிகள் தேவை

யாழ் நகரில் இயங்கும் மென்பான விற்பனை நிலையத்தில் லொறியில் சென்று மென்பானம் விற்பனை செய்து வர விற்பனை பிரதிநிதிகள் SALES REP தேவை. உங்கள் சுயவிபரக் கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம் - C-2573
வலம்புரி
03, 2 வது ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(C-2573)

# கலகத்தடுப்பு பொலிஸாரின் நடவடிக்கை குறித்து அறிக்கை கோருகின்றார் பிரதமர்

(கொழும்பு)

உயர் தேசிய கணக்கீடு டிப்ளோமா பாடநெறி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் மீது கலகத்தடுப்பு பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பில் அறிக்கையொன்றை தனக்கு சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு இவ்வுத்தரவை அவர் பிறப்பித்துள்ளார். (இ-7-10)

# பல்கலை. மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு புதிய ஜனநாயக மக்கள் முன்னணி கண்டனம்

பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் குறித்து புதிய ஜனநாயக மக்கள் முன்னணி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து அக்கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு வாட் பிளேஸில் உள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அலுவலகத்தின் முன்னால் நான்கு வருட கற்கை ஆண்டாக இருந்த தேசிய அதிஉயர் கணக்காளர் பட்டப்படிப்பினை (HNDA) மூன்றாண்டாக குறைத்து, இந்த கற்கை நெறியின் தராதரத்தை குறைத்துள்ளமைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த மாணவர்கள் மீது "நல்லாட்சி" அரசானது தண்ணீர்த் தாங்கிகள், கண்ணீர்ப் புகை குண்டுகள் கொண்டு தாக்குதல்கள் நடத்தியதுடன் கலகம் அடக்கும் விசேட படையினரை ஏவி விரட்டி காட்டுமிராண்டித்தனமாக தாக்குதலை நடத்தியுள்ளது.

இதுவரை 39 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 40 இற்கும் அதிகமான மாணவர்கள் மோசமான அடிகாயங்களுடன் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் இரு பிக்கு மாணவர்கள் மற்றும் ஐந்து பெண் மாணவிகள் அடங்குவர்.

உலக நாணய நிதி நிறுவனத்தின் அறிவுறுத்தலுக்கமைய மகிந்த அரசு இலவச கல்விக்கு சங்கு ஊதும் பணியினை தொடங்கியது. இதனை எதிர்த்து தொடர்ச்சியாக பல போராட்டங்களை அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் பல்கலைக்கழக மாணவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த மகிந்த அரசு காலத்தில் மாணவர்கள் பல பெரும் போராட்டங்களை நடத்தி இருந்தமையும் மகிந்த அரசு அரச குண்டர் படையான இராணுவத்தினை ஏவி அந்தப் போராட்டங்களை அடக்க முனைந்ததுடன் பல மாணவர்களை போலி விபத்துக்களில் கொலை செய்ததுடன் மாணவர்களின் குடும்பத்தினரையும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கி இருந்தது. எனினும் மாணவர்கள் அஞ்சாது தொடர்ந்து போராடினர்.

மைத்திரியின் ஜனாதிபதி தேர்தல் பிரசார விளம்பரம், பல்கலைக்கழக மாணவர் மீதான மகிந்த அரசின் தாக்குதல் குறித்தான புகைப்படங்கள், வீடியோ காட்சிகளை பயன்படுத்தி கல்வி உரிமையை பாதுகாத்து, ஜனநாயகத்தை உறுதி செய்வோம் என்று தொடங்கியது.

ஆனால் இன்று அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர் தேர்தல் கால வாக்குறுதிகளையும், உறுதிமொழிகளையும் காற்றிலே பறக்க விட்டுவிட்டனர் "நல்லாட்சி" அரசினர். கல்விக் கொள்கையில் முந்தைய அரசின் கொள்கையே தொடந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. கல்வியினை ஒரு விற்பனை பண்டமாக மாற்றும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்த அழிவுச் செயலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மாணவர்கள் மீது முன்னைய அரசு போலவே இன்றைய "நல்லாட்சி" அரசும் தாக்குதல் நடத்த தயங்கவில்லை என்றும் புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவியுங்கள்

## யாழ்.இந்து சமயப் பேரவை கோரிக்கை

தீபாவளி தினத்தை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவியுங்கள் என்ற கோரிக்கையினை யாழ்.இந்து சமய பேரவை விடுத்துள்ளது.

பேரவை விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் தீபாவளி தினத்தை தமிழ் அரசியல் கைதிகள் தத்தமது வீடுகளில் தமது உறவினர்களுடன் இணைந்து கொண்டாடக் கூடிய வகையில் அவர்களை உடனடியாக விடுதலை செய்ய பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று பகிரங்கமாக கேட்டுக் கோருகின்றோம்.

தீபாவளி தினத்தை ஒட்டி கைதிகள் விடுதலை செய்யப்பட்டால் கைதிகளின் குடும்பங்கள் பெரும் மகிழ்ச்சி அடையும்.

நரகாசுரனின் அராஜக ஆட்சி முடிவுக்கு வந்த நாளை மக்கள் தீபாவளி தினமாக கொண்டாடி வருகின்றனர்.

இந் நாளை முன்னிட்டு சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டால் உலகிலுள்ள இந்துக்கள் பெரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்குவார்கள் என்பது உறுதி.

மேலும் இலங்கைத்திருநாட்டில் அராஜக நடவடிக்கைகள் முடிவு பெற்றதை வெளிக்காட்ட இலங்கை அரசிற்கு இது ஒரு மாபெரும் சந்தர்ப்பமுமாக இருக்குமென்று நாம்கருதுகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்கான 2003.01.22 ஆம் திகதி அ.ம.வி/02/1904/128/086 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 3 ஆம் வகுப்பின் விசேட கல்வி, தொழில்நுட்பப் பாடங்கள், தகவல் மற்றும் தொடர்பு சாதன தொழில்நுட்பம் , மேற்கத்தேய சங்கீதம், சித்திரம், சங்கீதம், உடற்கல்வி மற்றும் கிறிஸ்தவ சமயம் ஆகிய பாடங்களுக்கான 2012.12.01 ஆம் திகதிவரை காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவையின் அல்லது அதிபர் சேவையின் அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் கடந்த 2012 டிசெம்பர் 31ஆம் திகதியன்றிலிருந்து 3 வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவம் கொண்ட உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

செயலாளர், கல்வி அமைச்சு, இசுறுபாய , பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை நேற்றைய தினம் வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம்.(இ-7-10)

# முன்னாள் எம்.பிக்களின் ஆயுதங்கள் குறித்து அறிவிக்கப்படும் - கயந்த

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை மீள ஒப்படைத்துள்ளார்களா? என்பது குறித்து அறிவிக்கப்படும் என ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து அறிவிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமையாக பாதுகாப்பிற்காக துப்பாக்கிகள் வழங்கப்படுகின்றன.

.தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எத்தனை பேர் வழங்கப்பட்ட துப்பாக்கிளை மீள ஒப்படைத்துள்ளார்கள் என்பது பற்றிய அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும்.

தற்போதைய நாடாளுமன்றில் யார் யார் துப்பாக்கி பெற்றுக் கொண்டுள்ளார்கள்? யார் பெற்றுக்கொள்ளவில்லை என்ற பெயர் விபரங்களை வெளியிட முடியாது.

எனினும் எத்தனை பேர் பெற்றுக் கொண்டுள்ளார்கள்? எத்தனை பேர் பெற்றுக்கொள்ளவில்லை என்ற புள்ளிவிபரத் தகவல்களை வெளியிட முடியும்.

எனினும் தற்போதைய நாடாளுமன்றில் பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதே எனது நம்பிக்கையாகும்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆயுத பயிற்சி வழங்கப்பட்டமை குறித்து எனக்கு தெரியாது என கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

# ராசி பலன்

**31.10.2015**

(ஐப்பசி 14, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57மணிக்கு,
சதுர்த்தி முற்பகல் 11.24 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 9.18மணிவரை
இராகுகாலம் 9.03-10.33மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி, விசாகம்<br>காலை 9.28 இற்கு<br>மிது-சந் | | |
| | | | குரு, செவ், சுக் |
| | சனி | சூரி, புத | ராகு |

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம் பெறலாம், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்:** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கடகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் கூடும் நாள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முயல்வீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்:** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பழைய பொருட்களை மாற்றி புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே சிறு சிறு விவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**தனுசு:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மகரம்:** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள் தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உடன் பிறப்புக்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

# நட்ட ஈட்டு கொடுப்பனவுகளை வழங்க 2 ஆயிரத்து 500 மில்.ரூபாய் தேவை

## புனர்வாழ்வு அதிகாரசபை பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**புனர்வாழ்வு அதிகார சபையால் மக்களுக்குரிய நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்குவதற்கு 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி தேவையென புனர்வாழ்வு அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எ.புவனேந்திரன் தெரிவித்துள்ளார்.**


புனர்வாழ்வு அதிகார சபையின் ஏற்பாட்டில்உடுவில்பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நடமாடும் சேவையில்கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் உள்ள புனர்வாழ்வு அதிகார சபையால் சொத்தழிவு, கடும்பாதிப்புக்கானநட்டஈடு, மதத்தலங்களுக்கான நட்ட ஈடு என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் புனர்வாழ்வு அதிகார சபைக்கு இந்த வருட திறைசேரியில் 500 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. அதில் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து 400 மில்லியன் ரூபா பெறுமதியான நட்டஈடுகளை மக்களுக்கு வழங்கியுள்ளோம்.

ஆனால் எம்மிடம் குறை நிரப்பு செய்யப்படாத 28 ஆயிரத்து 800 கோவைகள் உள்ளன. அவற்றுக்கான நட்ட ஈடுகளை வழங்குவதற்கு போதிய நிதி எம்மிடம் இல்லை. உடனடியாக நட்டஈடு வழங்க வேண்டுமெனில் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாய் நிதி எமது சபைக்கு ஒதுக்கப்பட வேண்டும். பொது மக்களுக்கான சேவையினை உதவிகளை மிக விரைவாக செய்து வருகின்றோம்.

எமதுசபைக்கெனதேவைப்படும் நிதி கிடைத்தால் மிக விரைவாக மக்களுக்கான சேவைகளை செய்யமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



புனர்வாழ்வு அதிகார சபையின் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் உடுவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெற்றது.உடுவில் பிரதேச செயலர் ப.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏற்கனவே புனர்வாழ்வு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட வீடு சொத்தழிவு, கடும் பாதிப்புக்கான நட்டஈடு, மதத்தலங்களுக்கான நட்டஈடு போன்றவற்றிற்கான பூரணப்படுத்தப்படாத கோவைகளை புனர்வாழ்வு அதிகார சபையினரால் எடுத்துவரப்பட்டு குறைநிரப்பு செய்யப்பட்டன. இதில் 12 புனர்வாழ்வு அதிகாரசபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் உடுவில், கோப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 400 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:பொ.சோபிகா)

# நூல் வெளியீடும் இசையரங்கும்

(யாழ்ப்பாணம்)

வர்ணம்கிரியேஷன்ஸ் மற்றும் சரஸ்வதி வெளியீட்டகம் வழங்கும் கவிஞர் வேலணையூர் சுரேஸின் நூல் வெளியீட்டு விழாவும் சிறப்பு இசையரங்கமும்நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன் போது வரவேற்புரையினை கவிஞர் கை. சரவணன் நிகழ்த்துவதுடன ஆசியுரையினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

தலைமையுரையினை யாழ். பல்கலைக் கழக தகைசார் வாழ் நாள் போராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளதுடன் வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக தமிழ் துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா.பல்கலை வித்தகரும் குரலிசை நிபுணருமான வர்ண ரமேஸ்வரன்,மூத்த எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்புரையினை வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வழங்கவுள்ளதுடன் வெளியீட்டுரையினை கவிஞர் கு. வீரா வழங்கவுள்ளார். கவிதை நூல மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் பிள்ளைப் பாடல்கள் மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் துறைத் தலைவருமான பேராசிரியர் ந.சண்முகலிங்கன் ஆகியோர் வழங்கவுள்ளனர். இதேவேளை இசையரங்கம் நிகழ்வில் பாட லினை கலாவித்தகர் இசைக்கலாமணி வர்ண ராமேஸ்வரன் வழங்குவதுடன் வயலின்- இணுவை நுண்கலை மாணி சு.கோபிதாஸ், மிருதங்கம்- மிருதங்க கலாவித்தகர் நல்லை நுண்கலைமாணி க.கண்ணதாஸ் , கெஞ்சிரா- கலாவித்தகர் ந. சிவசுந்தரசர்மா, முகர்சிங் கலாவித்தகர் சி.செந்தூரன் ஆகியோர் பங்காற்றவுள்ளனர்.

“களுவம்வேலியும்கிடுகுத் தட்டியும்” என்ற கவிதை நூலும், “ பிள்ளைத் தமிழின்பம்” என்ற பிள்ளைப் பாடலும் நூல்களாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பொதுக்கூட்டம்

யாழ்.சித்தங்கேணி வட்டு இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் ஆலோசனைக் குழு அமைத்தலும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் நா.தனபாலசிங்கம் கேட்டுள்ளார். (இ-5)

## மணிவிழா

ஆசிரியர் ஆறுமுகம் தங்கராஜாவின் மணிவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு கோ.பரமானந்தன் தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது “ தங்கம் 60 “ நூல் வெளியீடு , மணிவிழா நாயகர் கௌரவிப்பும் இடம்பெறும். (இ-5)




# யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளை முதல் புதிய நடைமுறைகள்

## அமுல்படுத்தப்படுமென பணிப்பாளர் அறிவிப்பு

01.11.2015 முதல் யாழ். போதனா வைத்தியசா லையில் பின்வரும் நடைமு றைகளை அமுல்படுத்த பொது மக்களிடமிருந்து பூரண ஒத் துழைப்பு கோரப்படுகின்றது.

- விடுதிகளில் தங்கி சிகி ச்சை பெறும் நோயாளர்களை பார்வையிடுபவர்களுக்கான நேரங்கள் கீழ்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| காலை | - காலை 06.00 முதல் காலை 06.30வரை |
| மதியம் | - நண்பகல் 12.00 முதல் பி.ப 01.00 வரை |
| மாலை | - பி.ப. 05.00 முதல் பி.ப 06.00 வரை |

காலையில் நோயாளர்க ளுக்கு உணவு வழங்க மாத்திரம் அனுமதிக்கப்படும்.

- விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிடுபவர்க ளுக்காக இதுவரை காலமும் இருந்து வந்த அனுமதி நடை முறை தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டுள்ள தோடு ஒரே நேரத்தில் ஒரு நோயாளியின் அருகே இரு பார்வையாளர்கள் மாத்திரம் அனுமதிக்க ப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- வைத்தியசாலைக்குள் பிர வேசிக்கும் பொதுமக்கள் தமது தேவைக்கும் நோயாளர்களின் தேவைக்குமென எடு த்து வரும் பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் பொருட்கள், இளநீர்க் கோம்பைகள் மற்றும் கழிவுப் பொருட்களை வைத் தியசாலை வளாகத்தில் விட் டுச் செல்லாது தம்முடன் எடு த்துச் செல்லுமாறு கேட்கப் படுகின்றார்கள்.
- வைத்தியசாலை வளாகத்தினுள் வெற்றிலை, சிகரெட், மதுபானம் உள்ளடங்கிய போதைப்பொருட்களை எடுத்து வருவது, பாவிப்பது, நோயாளர்களுக்கு வழங்கு வது முற்றாகத் தடை செய்யப் பட்டுள்ளதுடன் இது தொடர் பாக தொடர்ச்சியாகக் கண்கா ணிக்கப் படும்.
- சிறுவர்கள், முதியவர்கள் மிக இலகுவில் நோய்த் தொற் றுக்குள்ளாகும் சந்தர்ப்பங் கள் உள்ளதால் இவர்கள் இயன்றவரை விடுதிகளில் பார்வையாளர்களாக வரு வதை தவிர்த்துக்கொள்ளவும்.
- தீவிரசிகிச்சைப்பிரிவு(EU), அதி தீவிர சிகிச்சைப்பிரிவு (ICU), பிரசவ விடுதிகள், குழ ந்தை விடுதிகள் போன்றவ ற்றில் சிகிச்சை பெறுபவர் கள் தீவிர மருத்துவ கண் காணிப்பிற்குள் உள்ளதால் இயன்றவரை மேற்படி பகு திக்கு பார்வையாளர்களாக வருவதை தவிர்த்துக் கொள் ளவும் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பா ளர் ரி.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். (இ)

# வடஇலங்கை சங்கீத சபையின் மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் மருதனார்ட மத்தில் அமைந்துள்ள வட இலங்கைச் சங்கீத சபையின் தற்பரானந்தன் கலையரங்கல் நடைபெறவுள்ளது. இதன் போது கமலக்காந்தன்- வர்ஜிகனின் இசை அரங்கு இடம் பெறும். இதில் வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- பிரம்ம ஸ்ரீ என். சிவசுந்தர சர்மா, கடம்- கே.ரவிசங்கர் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

தொடர்ந்து புல்லாங்குழல் இசைக்கச்சேரி இடம்பெறும். இதில் பாட்டு- ஜி.நக்கீரன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- எஸ். வேல்மாறன், கடம்- வி.சிவமூர்த்தி, கெஞ்சிரா- கே.நந்தகுமார் ஆகியோர் பங்காற்றவுள்ளனர்.

அத்துடன் இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை அறநெறி மாணவர்கள் வழங்கும் ஞான வேல் எனும் புராண இதிகாச நாடகம் இடம்பெறும். (இ-5)

# பயன்படுத்த முடியாத நிலையில் பேருந்துத் தரிப்பிடம் உள்ளது

(பொற்பதி)

பருத்தித்தித்துறை பிரதேச சபையின் பொது நூலகத்திற்கு முன்பாகவுள்ள பேருந்துத் தரிப்பிட நிலையத்தை பயணிகள் முற்றாக பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பேருந்து தரிப்பிட நிலையமானது உடைவு கள், மழை ஒழுக்குகள் என் பன இலாது காணப்பட்டா லும் மழை நீரானது வீதியில் இருந்து வழிந்து ஓடி வந்து பேருந்துத் தரிப்பிட நிலைய த்தின் உள்ளே தேங்கி காண ப்படுகின்றது.

இதன் காரணமாக பேருந்து தரிப்பிடத்தின் உள்ளே வெள்ள நீரும் சேறும் நிரம்பிக் காணப்படுகிறது.

இதனால் இப் பேருந்துத் தரிப்பிட நிலையத்தை பயன்படுத்தும் பயணிகள் பல தரப்பட்ட சிரமங்களை தினமும் எதிர் நோக்குகின்றனர்.

எனவே மேற்படி பேருந்து தரிப்பிட நிலையம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ளுமாறு பேருந்து தரிப்பிட நிலைய பயணிகள் கேட்டுள்ளனர். (இ-5- 64)

# காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தேசிய காணிக்கொள்கை அவசியம்

## ஜே.வி.பியின் தலைவர் அறிவுரை

(கொழும்பு)

**காணிப்பங்கீட்டில் பிரதேச அரசியல்வாதிகளின் தலையீடுகள் அவசியமற்றது. நாட்டின் காணி விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமானால் எக்காலத்திலும் மாற்றப்பட முடியாத தேசிய கொள்கையொன்று அவசியமானதெனத் தெரிவித்திருக்கும ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பிரதேச அரசியல் வாதிகளின் தலையீட்டால் காணிப் பகிர்வுகள் இடம்பெறுவதை முற்றுமுழுதாக தடைசெய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.**



பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் எழுதிய முசலி தெற்குப் பிரதேசத்திலும் வில்பத்துவிலும் மீளக்குடியமர்த்தல் குறித்த பிரச்சினையும் "Denying the Right to Return" எனும் நூலின் வெளியீட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு கொழும்பு தபால் தலைமையகக் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த வைபவம் கடந்த புதன்கிழமை மாலை இடம் பெற்றது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜே.வி.பி. தலைவர் தெரிவிக்கையில்,

வடபுலத்தில் முக்கியமாக முசலி பகுதியிலிருந்து 25 வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது பூர்வீக வாழ்விடங்களில் மீளக்குடியமர என்ன செய்ய வேண்டுமென்பதை விரிவாக விளக் கும் வகையில் இந்த நூலை பேராசிரியர் ஹிஸ்புல்லா எழுதியிருந்தாலும் இந்தவிடயம் முசலியோடு மட்டுப்படுத்தக் கூடியதொன்றல்ல.

நாடளாவிய மட்டத்தில் பரந்துபட்ட விவகாரமாகவே நாம் பார்க்கின்றோம். போர்க் காலத்தில் வடக்கில் பாதுகாப்புக்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டன. படை முகாம்களை பாதுகாக்கும் பொருட்டு அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் ஆயுத பாணிகளாக நிலைகொண்டிருந்த எல்லை வரை இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் நீண்டிருந்தன. இப்போது யுத்தம் முடிந்து விட்டது. யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் அரசு இப்பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும்.

முன்னைய அரசு இந்த விடயத்தில் துளியளவும் கரிசனை காட்டவில்லை. தொடர்ச்சியாக இராணுவ முகாம்களாக இருந்த பகுதிகள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகவே இருந்து வருகின்றன.

2012 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மன்னார் மாவட்டத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதாக கருத முடியாது. பொலனறுவை, புல்மோட்டை, அநுராதபுரம் அம்பாறை, அம்பாந்தோட்டை உள்ளிட்ட சகல பகுதிகளுக்கும் இது பொருந்த வேணடும்.

வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் காணி உரிமைகளை உறுதிப்படுத்த இன்று அவர்களிடம் உரிய எழுத்து மூல ஆவணங்கள் இல்லை என்பதற்காக அவர்களது பூர்வீக பூமியை யாராலும் மறுதலிக்க முடியாது.

அகதிகளாக்கப்பட்ட மக்களின் இந்த காணிப்பிரச்சினையை, பூர்வீக பூமி விவகாரத்தை எவரும் கண்டு கொள்ளாதிருக்க முடியாது.

வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை கூடுதல் கவனத்துக்கு எடுத்து அதற்குத் தீர்வு காண்பதற்கான அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

காணி அல்லது வாழ்விடம் என்பது சாதாரண விடயமல்ல. பணம், நகை, வாகனம் என்பவற்றை நாம் எமது சொத்தாக பார்க்கின்றோம். ஆனால் காணியை எவ ரும் சொத்தாக மட்டும் பார்க்க முடியாது.

அது எமது உயிரில் சரிபாதியாகும். பெற்ற தாய்க்கு அடுத்த படியாக தாயகத்தையே உயர்வாக பார்க்கின்றோம். வருடத்தில் ஒரு தடவையாவது தாய் வீட்டுக்குச் செல்லாதவர்களாக நாம் ஒரு போதும் காணப்பட வில்லை.

இந்தக் காணிப்பிரச்சினையை அரசாங்கம்தான் தீர்த்து வைக்க வேண்டும். கடந்தகால மகிந்த ஆட்சியில் விடப்பட்ட தவறை இன்றைய அரசும் விடக்கூடாது. இது தமிழ் மக்களுடைய அல்லது முஸ்லிம் சமூகத்துடைய விடயமாகப் பார்க்கப்படக் கூடாது. எமது நாட்டில் எரிகின்ற பிரச்சினையாகவே பார்க்க வேண்டும்.

வெளியேற்றப்பட்ட மக்களின் சொத்துக்கள் மட்டும் அழியவில்லை. காணி உறுதிப்பத்திரங்களும் யுத்த காலத்தில் அழிந்து போயுள்ளன. இதன் காரணமாக காணிப் பிரச்சினை இன்று விஸ்வரூபமெடுத்திருக்கின்றது.

இந்த விடயத்தை அரசு தட்டிக்கழித்து விட முடியாது. அன்றைய அரசு யுத்தம் முடிந்ததும் என்ன செய்தது பூர்வீக மக்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்காமல் வெளியிடங்களிலிருந்து மக்களை குடியேற்ற நடவடிக்கை எடுத்தது. இது பாரிய அநீதியாகும்.

அந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயமாகும்.

தற்போது அரசுக்கு நல்லதொரு வாய்ப்புக்கிட்டியுள்ளது. பேராசிரியர் ஹிஸ்புல்லாவின் ஆய்வு நூலைப் பயன்படுத்தி உரியவர்களுக்கு தத்தமது காணிகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களை அவர்களது பூர்வீக பூமியில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சிறுவர், முதியோர் தினவிழா இன்று

சமூக அபிவிருத்தி மன் றம் நடத்தும் சிறுவர், முதியோர் தினவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கந்தர்மடம் சைவப்பிர காச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன் றத் தலைவர் சி.குமாரலி ங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறு வர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் உப தலைவர் விஜயரட்ணம் கேசவன் கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது வரவேற்புரை யினை சமூக அபிவிருத்தி மன்ற அறவீட்டு உத்தியோகத்தர் திருமதி எஸ். கவிதா நிகழ்த்துவதுடன் தலைமை யுரையினை சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் எஸ். குமாரலிங்கம் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் சமூக அபி விருத்தி மன்ற முன்னாள் தலைவர்கள் திருமதி. நவ நீதம் ஜெகதீசன், திருமதி றுக்மணி ஆனந்தவேல் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ-5)

## மட்டு., திருமலையில் வெடிபொருட்கள் மீட்பு

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள் வெள்ளம் காரணமாக தேங்கி நிற்கும் நீரினை வழிந்தோடச் செய்யும் முகமாக பெக்கோ இயந்திரத்தின் துணையுடன் வடிகான் அமைக்கும் பணியினை கல்குடாவில் முன்னெடுத்தனர்.

இதன்போது மர்மப்பொருள் ஒன்று தென படுவதையடுத்து அருகிலுள்ள பொலிஸாருக்கு தகவல் வழங்கினர், சம்பவ இடத்திற்கு வந்த அவர்கள் அங்கிருந்து ஆட்லறி 122 மோட்டார் குண்டை கைப்பற்றினர். பின்னர் குண்டு செயலிழக்கச் செய்யும் இராணுவப் பிரிவினர் வரவழைக்கப்பட்டு அவற்றினை செயலிழக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

தற்போது பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத் திட்டமானது தொழிலாளர்களின் உயிர் பாதுகாப்பு கருதி பொலிஸாரின் பதிலை எதிர்பார்த்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சபையின் செயலாளர் எஸ். எம். சிஹாப்தீன் தெரிவித்தார்.

இதேவேளை, திருகோணமலை வில்கம் விகார பிரதேசத்தில் பற்றை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருட்களை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றி உள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-7-10)


அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:16<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/மேற்பார்வையாளர் கட்டார்<br>தொ.இ:B/5128 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 17செவ் 2 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5145 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 51செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5129 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 16செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BBA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5146 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:DIPLOMA/அரச தொழில்<br>தொ.இ: B/5130 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:ஆசிரியர் கனடா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5151 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 5<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:CIMA/கணக்காளர் லண்டன் PR<br>தொ.இ: B/5131 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 36 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்BSC, ICT/அரச தொழில்<br>தொ.இ: G/5152 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# மறுவயற் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க 100 விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கல்

## முல்லை.பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது

(முல்லைத்தீவு)

மாகாண விவசாய அமைச்சின் அனுசரணையில் முல்லைத்தீவு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் சம அடிப்படையிலான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மறு வயற் பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் முகமாக கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கொக்குத்தொடுவாய் நிலக்கடலை உற்பத்தியாளர் சங்கத்தின் களஞ்சிய கட்டடத்தில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் நிலக்கடலை 3 கிலோ, பயறு 2 கிலோ, உழுந்து 2 கிலோ என்பன பொதிகள் செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

விவசாய உபகரணங்களான கத்தி, மண்வெட்டி என்பன ஒவ்வொரு விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டன.

அத்துடன் பயனாளிகளுக்கு பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டு பயிர்ச்செய்கை வழிகாட்டி துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இந்நிகழ்வில் விவசாய கூட்டுறவுத் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதாக இருந்தபோதும் மன்னார் மடுவில் பிறிதொரு நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டமையால் அவரின் பிரதிநிதியாக வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் கலந்து கொண்டார்.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் சிறப்புரையாற்றுகையில், போருக்கு முன்னரான காலத்தில் இக்கிராமங்களில் பாரம்பரிய தானிய வகைகளான தினை, குரக்கன், இறுங்கு, சாமை என்பன பயிரிடப்பட்டு வந்தன.

இக்கிராம மக்களும் அயல் கிராம மக்களும் இத் தானிய வகைகளை தமது உணவாக உட்கொண்டு வந்தமையால் பலம் மிக்க வீரம் செறிந்தவர்களாக நோய் நொடி தாக்காதவர்களாக வாழ்ந்து வந்ததாகவும் தற்போது இவற்றை தவிர்த்தமையாலும் இரசாயன பசளை மருந்துகளின் பாவனை அதிகரித்தமையாலும் மக்கள் பல்வேறு நோய் நொடித்தாக்கத்திற்கு உள்ளாக்குவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இங்குள்ள எரு, குழைகள் போன்ற சேதன பசளை மூலங்களை அற்ப பணத்திற்காக பிற மாவட்டங்களிற்கு அனுப்புவதைத் தவிர்த்து கூட்டுச் சேதனப் பசளையினை உற்பத்தி செய்து அந்த விளை பொருட்களை உட்கொள்வதன்மூலம் சுகதேகிகளாக வாழமுடியும் என்றார்.

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் உரையாற்றுகையில்,



முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் ஒற்றுமையுடனும் விட்டுக்கொடுப்புடனும் மக்களின் நலன் ஒன்றையே நோக்காகக் கொண்டு செயலாற்றுகின்றனர்.

அத்துடன் கடந்த ஆட்சிக் காலத்தில் மக்கள் நலன் சார்ந்த ஒரு நிகழ்வை நடத்துவதென்றால்கூட அதில் ஒரு அமைச்சரோ அல்லது மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் பிரசன்னம் முக்கியத்துவ ப்படுத்தப்படும்.

அவர்களிற்கு நேரம் இல்லை என்றால் அந் நிகழ்வுகள் அவர்களிற்கு நேரம் வரும்வரை பிற்போடப்படும். ஆனால் எமது மாகாண சபை நிர்வாகத்தில் அப்படியில்லை. இன்று கூட விவசாய அமைச்சர் இந்நிகழ்வில் அதிதியாக கலந்துகொள்வதாக இருந்தது. இருந்தும் அவர் பிறிதொரு நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டமையால் நிகழ்வை ஒத்திவைக்காது அவரின் பணிப்பிற்கு அமைய புரிந்துணர்வின் அடிப்படையில் நானும் ஏனைய மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டோம் என தெரிவித்தார்.

முன்னதாக பேசிய பிரதி விவசாயப் பணிப்பாளர் தற்போது வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் லவ் பேர்ட்ஸ் குருவிகளுக்குத்தான் உணவாக கொடுப்பதற்கு மக்கள் தினை, சாமை போன்ற தானியங்களை தேடித்திரிவதனையும் கொள்வனவு செய்வதனையும் அவதானிக்க முடிகின்றது.

ஆனால் இவற்றை சிறந்த உணவாக எமது அன்றாட உணவுத் தேவையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் பிரதம விருந்தினராகவும் மாகாண சபை உறுப்பினர்கள் து.ரவிகரன் மற்றும் சி.சிவனேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (2-302)




# சட்டவிரோத கடல் வள அபகரிப்புக்கு எதிராக பூநகரியில் அஞ்சல் அட்டை போராட்டம் நேற்று

நாட்டின் வடபுலகடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைகின்ற இந்திய இழுவைப் படகுகளினால் வடக்கு கடற்பரப்பில் கடல் வளம் கொள்ளையிடப்படுகின்றது. இதைத்தடுத்து நிறுத்துமாறு கோரிஅஞ்சல்அட்டைகளை அனுப்புகின்ற விழிப்புணர்வு செயற்பாட்டினை கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நேற்று மேற்கொண்டது.

இந்த நிகழ்வு பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாச செயலகத்தில் அதன் தலைவர் பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சல் அட்டை போராடத்தை ஆரம்பித்து வைததார் யாழ்.மாவட்ட பா.உறுப்பினர் சி.சிறீதரன்.

இந்த அஞ்சல் அட்டைகள் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவரும தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், இந்திய பிரதமர் நரேந்திரமோடி, இலங்கை கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விகனேஸ்வரன் உள்ளிட்ட ஐயாயிரம் பிரமுகர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந் நிகழ்வுகளில் கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள், கடற்றொழிலாளர்கள், நலன் விரும்பிகள், கிளிநொச்சி மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பின் அமைப்பாளர வேழமாலிகிதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (2)

# துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு நூல்கள் அன்பளிப்பு



அடிப்படை வசதிக்குறைபாட்டுடன் உள்ள முல்லை., துணுக்காய் வலயத்தின் ஐந்து பாடசாலைகளுக்கு வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனினால் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

நூலகங்களை விருத்தி செய்யும் கல்விச் செழுமை செயற்றிட்டத்தின் மற்றுமொரு கட்டத்தின் மூலமாகவே மேற்படி நூல்கள் துணுக்காய் வலயத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளுக்கு அண்மையில் வழங்கப்பட்டன. இது தொடர்பில் தெரியவருவதாவது,

தாயகத்தில் உள்ள பல்வேறு கட்டமைப்புகளையும் பலப்படுத்தும் நோக்கில் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனினால் சாதிக்கும் சந்ததி, கல்விச் செழுமை மற்றும் வாழ்வோம் வளம் பெறுவோம் என்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலை முற்றாக நீக்கும் நோக்கோடு சாதிக்கும் சந்ததி செயற்றிட்டமும் கல்விச் செழுமை செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பாடசாலைகளில் நிலவும் அத்தியாவசியத்தேவைகள் மற்றும் தீர்க்கப்படாதிருக்கும் குறைகள் தொடர்பான கோரிக்கைகளும் பாடசாலை சமூகத்தால் ரவிகரனிடம் முன்வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள ஐந்து பாடசாலைகள் உள்வாங்கப்பட்டதோடு கல்விச்செழுமை செயற்றிட்டம் இதுவரையில் தனது ஐந்து கட்டங்களின் நிறைவில் ஒன்பது இலட்சம் பெறுமதியான நூல்களை 82 பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-281)

இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக்கு

# ஐந்து பிர.செயலக பிரிவுகளில் எட்டுப்பேர் வேட்புமனுத் தாக்கல்

(பனிக்கன்குளம்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் 8பேர் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட அதிகாரி மா.சசிக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக்காக எவரும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை. கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களைச் சேர்ந்த 8பேர் வேட்புனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இதன்படி கரைதுறைப்பற்று. பிரதேச செயலாளர் பிரிவில் நீராவிப்பிட்டி நீரா இளைஞர் கழக உறுப்பினர் எம்.எஸ்.எம்.சுஹைல், வற்றாப்பளை செந்தமிழ் இளைஞர் கழக உறுப்பினர் எஸ்.சதீஸ்கரன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் திருமுறிகண்டி வளர்பிறை இளைஞர் கழகத்தை சேர்ந்த இராசேந்திரம் பிரதீபன் கனகரத்தினபுரம் ஆதவன் இளைஞர் கழகத்தை சேர்ந்த சண்முகராசா பிரியந்தன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் ஸ்ரீ விக்னேஸ்வரா இளைஞர் கழகத்தைச் சேர்ந்த சிவராமலிங்கம் சிந்துஜா, மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் வன்னிவிலான்குளம் கதிரவன் இளைஞர் கழகத்தை சேர்ந்த வி.விதுர்ஷன், நட்டாங்கண்டல் மாறன் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த தங்கவேல் விக்னேஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உயிலங்குளம் இளங்கதிர் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த கிருஷ்ணராசா தரனிதரன் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன், கடந்த 28ஆம் திகதி புதன் கிழமையிலிருந்து எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி நள்ளிரவு வரை இளைஞர் பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், நவம்பர் மாதம் 7ஆம் திகதி காலை 8 மணிமுதல் 3 மணிவரை வாக்கெடுப்பு நடைபெறும்.

குறித்த வாக்களிப்பில் 2015 ஆம் ஆண்டு இளைஞர் கழக அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்கள் தாங்கள் நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலகங்களில் வாக்களிக்க முடியும் எனவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட அதிகாரி மா்.சசிக்குமார் தெரிவித்தார். (2-281)

# முல்லையில் மின்சாரமற்ற குடும்பங்களுக்கு மின் இணைப்பை வழங்க நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கஷ்டப்பிரதேசத்தில் வாழும் மின்சாரம் பெறாத குடும்பங்களுக்கு இலவசமாக மின்சார இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜமால்தீன் ரிசாம தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த அரசாங்கத்தினால் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு வந்த மின்சார விநியோகம் கடந்த ஜூலை மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கு மின்விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மற்றும் மின்சக்தி அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மீண்டும் மின்சார இணைப்பு வழங்காவிட்டாலும் அதற்கு பதிலாக மாற்றீடு நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எனினும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் மின்சாரம் பெறாத குடும்பங்களுக்கு இலவசமாக மின் விநியோகத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக பிரதி மின்சக்தி அமைச்சர் அஜித் பி. பெரேரா கூறியுள்ளார்.

குறித்த் திட்டங்கள் யாவும் மூன்று மாதங்களுக்கு நிறைவு செய்யப்பட வேண்டி இருப்பதால், முல்லைத்தீவு மாவட்டத்தில் மின்சாரமற்ற சகல குடும்பங்களும் தமது கிராம சேவகர் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன், வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மின்சாரத்திற்காக விண்ணப்பித்தவர்களும் குறித்த புதிய திட்டத்திற்குள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் மின்சாரமில்லாத சகல கிராமங்களுக்கும் மின்சாரத்தை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதி மின்சக்தி அமைச்சர் அஜித் பி. பெரேராவிடம் கோரிக்கையொன்றையும் விடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (2-281)




குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய

# 5 இலட்சம் ரூபா செலவில் மக்களுக்கு கிணறு அமைப்பு

(குருமன்காடு)

தைபா சமூக அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் செட்டிகுளம், பெரியகட்டுப் பகுதியில் 5 இலட்சம் ரூபா செலவில் கிணறு ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம், பெரியகட்டுப்பகுதியில் உள்ள இராணுவத்தின் 2ஆம் றெஜிமென்ட் படைப்பிரிவின் தலைமையகப் பகுதியில் இக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் நீர்த் தட்டுப்பாடு ஏற்படும் போது இராணுவத்தின் துணையுடன் குடிநீரை மக்களுக்கு வழங்கும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் உள்ள தனவந்தர்களின் நிதி உதவியில் தைபா சமூக அபிவிருத்தி அமைப்பினால் அமைக்கப்பட்ட இக் கிணறு நேற்று முன்தினம் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தைபா சமூக அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளர் எம்.ஜே. எம். றிஸ்வான் மதனி, அதன் முக்கியஸ்தர் செய்து முகமட், செட்டிகுளம் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எஸ்.எம். சர்ரூக், 2 ஆம் றெஜிமென்ட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி லெப் கேணல் ஜெயவீர மற்றும் இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-250)

# பாடசாலை கட்டடத் திறப்பு விழா

(கிளிநொச்சி)

யு.என்.ஹபிராட் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட கிளி/ விவேகானந்த நகர் மேற்கு பாடசாலை எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஜப்பான் நாட்டின் வதிவிட பிரதிநிதியினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யு.என். ஹபிராட் நிறுவன பிரதித்திட்ட முகாமையாளர், அவுஸ்திரேலிய நாட்டின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு அனைத்து ஊடகவியலாளர்களுக்குமான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து ஊடகவிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-254)



கிளிநொச்சி சிவநகர் கிராம முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலையில் மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ச.பி.அமல்ராஜா, கிளிநொச்சி மாவட்ட அலுவலர் வே.தபேந்திரன், கிளிநொச்சி மாவட்ட மூத்தோர் பேரவை பொருளாளர் கே.சந்திரராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர். (படங்கள்: சிவநகர் செய்தியாளர்)

# முல்லை.மாவட்டத்தில் 191 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு விமானப்படை மற்றும் விமானப்படையின் சேவா வனிதா ஆகியவற்றின் அனுசரணையில் முல்லைத்தீவில் இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படையின் கட்டளை அதிகாரி வின்கொமாண்டர் மயீர வாசல தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு விமானப்படையின் சேவா வனிதா தலைவி சமந்தி புலத்சிங்கல பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் சேவா வனிதா அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது முல்லைத்தீவு வற்றாப்பளை உதய சூரியன் முன்பள்ளி மாணவர்களுக்கு புத்தகப்பை உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வற்றாப்பளை, கேப்பாபிலவு, முள்ளியவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 191 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# மலசலகூடம் இன்மையால் மாணவர்கள் கடும் அவதி

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட புளியங்குளம் ஆரம்ப பாடசாலையில் மலசலகூடம் அமைக்கப்படாமையால் தமது பிள்ளைகள் அவதிப்படுவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான 96 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களின் அடிப்படை தேவையான மலசலகூடம் இல்லாமையால் பாடசாலை நேரங்களிலேயே மாணவர்கள் தமது வீடுகளுக்குச் செல்ல வேண்டி வருவதாக பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

புதிதாக பாடசாலை கட்டடத் தொகுதி அமைக்கப்பட்ட போதிலும் மாணவர்களின் அடிப்படை தேவையான மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்படாமையினால் மாணவர்கள் இடைவேளைகளில் வெளியே சென்று வருவது அவர்களின் கல்வியில் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளது.

ஆகவே பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு விரைவில் மலசலகூடம் அமைத்துத் தரும்படி மாணவர்களின் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (2-250-281)

# மாற்றுத்திறனாளிகள், முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித்திட்டம்

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் யுத்தத்தினால்முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கான உதவித்திட்டங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும் வைத்து வழங்கப்பட்டது. இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து 69பேருக்கும்ஒட்டுசுட்டான்பிரதேசசெயலகத்தில் வைத்து 79 பேருக்கும் வழங்கப்பட்டது.

இந்த உதவித்திட்டமானது ஒவ்வொரு பயனாளிகளுக்கும்தலா ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபா வீதம் இவர்களுக்கான இலகு வசதியுடன் கூடிய மலசல கூடங்களை அமைப்பதற்கு காசோலைகளாக வழங்கப்படவுள்ளது.

இதன்பிரகாரம் பயனாளிகளின்பங்களிப்பாக 40 ஆயிரம் ரூபாவும் ஒரு இலட்சத்து 22 ரூபா காசோலையாகவும் வழங்கப்படவுள்ளது. முதற் கட்டமாக நேற்று முன்தினம் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் 30 ஆயிரம் ரூபா நிதி காசோலையாக வழங்கி வைக்கப்பட்டது.



இத்தொகை மூன்று கட்டங்களாக வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி எஸ்.சிவமோகன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஜனோபர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# உலகப் பொருளாதாரம் பற்றி தெளிவற்றவர்களே ஆட்சியில்

## டியூ குணசேகர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உலகப் பொருளாதாரம் பற்றி தெளிவற்றவர்களே இன்று ஆட்சி செய்து வருகின்றனர் என முன்னாள் அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சிகளினால் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கொங்கொங் சென்று சீனாவிடம் உதவி கோரியுள்ளார்.

பழையவற்றை மறந்து எமக்கு உதவுமாறு வேண்டுகின்றேன் என ரவி கருணாநாயக்க சீனாவிடம் கோரியுள்ளார், இந்த விடயம் இலங்கை ஊடகங்களில் வெளியாகவில்லை.

சர்வதேச பொருளாதார சூழநிலை பற்றி விளக்க மற்றவர்களே ஆட்சி செய் கின்றனர்.

1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அல்ல இன்று ஆட்சி நடத்துவது.தற்போது ஆட்சி செய்யும் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவிதமான அறிவுமற்ற ஓர் அரசாங்கமாகும்.

தற்போதைய அரசாங்கம் வெறும் வாய்ச்சவடால் விடும் பழக்கத்தையே கொண்டுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.(இ-7-10)




# வெள்ளைக்கொடி விவகாரம் பொய்!

## சிங்களப் பத்திரிகை செய்தி

(கொழும்பு)

**வெள்ளைக் கொடியுடன் விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் சரணடைந்த விவகாரம் பொய் என்று அமெரிக்கத் தூதரக அதிகாரியொருவர் கூறியுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

அமெரிக்கத் தூதரகத்தின் இராணுவ அதிகாரியாக கடமையாற்றிய லோரன்ஸ் ஸ்மித் என்பவர், விடுதலைப் புலிகளின் தலைவர்கள் வெள்ளைக்கொடியுடன் இராணுவத்தினரிடம் சரணடைய முற்பட்டமை நம்ப முடியாத விவகாரம் என்று கூறியிருந்ததாக குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வரும் விடுதலைப் புலிகளை படுகொலை செய்யுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு உத்தரவிட்டமையை செவிமடுத்ததாக கூறியுள்ள ஊடகவியலாளரின் கூற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல.

ஏனெனில் இவ்வாறான இரகசிய உத்தரவுகளை கையடக்க தொலைபேசி ஊடாக வழங்கும் சம்பிரதாயம் இராணுவத்தில் இல்லை.

அத்துடன் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சரணடைவது தொடர்பாக எந்தவிதமான கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் கெலம் மெக்ரே, பிரான்சிஸ் ஹரிசன், மாரி கொல்வின் போன்ற விடுதலைப் புலி ஆதரவு ஊடகவியலாளர்களே வெள்ளைக் கொடி விவகாரத்தை உருவாக்கியிருப்பதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.(இ-7-10)

# விமலின் செயற்பாடுகள் கவலைக்குரியது-ரஞ்சன்

(கொழும்பு)

குற்றம் செய்துவிட்டு அதனை வார்த்தை ஜாலங்களால் மறைக்க முயலும் விமல் வீரவன்சவின் செயற்பாடுகள் கவலைக்குரியது என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.



விமல் வீரவன்சவின் கடவுச்சீட்டு விவகாரம் தொடர்பாக சிங்கள ஊடகம் ஒன்று கேள்வியெழுப்பிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க,

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறும் வகையில் விமல் வீரவன்ச கடவுச்சீட்டு விவகாரத்தில் நடந்து கொண்டுள்ளார்.

அதன்மூலம் சட்டத்தை மீறிய அவர் தற்போது எதுவுமே நடைபெறாதது போன்று வீரம் காட்டிக்கொண்டு வார்த்தை ஜாலங்களால் தனது தவறுகளை மறைக்க முயற்சிக்கின்றார்.

தங்கள் தவறுகளை மறைத்துக் கொண்டு, சமூகத்தின் மத்தியில் தவறான கருத்துக்களை பரப்புவது மோசமான முன்னுதாரணமாகும்.

அந்த வகையில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் விமல் வீரவன்சவின் செயற்பாடுகள் கவலையளிப்பதாக அமைந்துள்ளது என்றும் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மாணவர்கள் அரசியல்வாதிகளை மண்டியிட்டு வணங்க வேண்டாம்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

பாடசாலை மாணவர்கள் அரசியல்வாதிகளை, மண்டியிட்டு வணங்க வேண்டாம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எல்லா அரசியல்வாதிகளும் சிறந்த நற்பண்புகளை உடையவர்கள் அல்லர். குறிப்பிட்ட சிலர் மாத்திரமே அவ்வாறு இருக்கின்றார்கள்.

ஆகவே மதிப்பளியுங்கள், ஆனால்மண்டியிட்டுவணங்க வேண்டிய அவசியம் இல்லைஎனதெரிவித்துள்ளார்.

அறநெறிப் பாடசாலைக்குச் சென்றாலும், பாலர் பாடசாலைக்குச் சென்றாலும், உயர்தர மாணவர்களின் கருத்தரங்கு ஒன்றுக்குச் சென்றாலும், மாணவ மாணவியர், மண்டியிட்டு வணங்குகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல்வாதிகளை வணங்கக் கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தம்மை மாணவர்கள் மண்டியிட்டு வணங்கிய போதிலும், தாம் போதைப் பொருள் விற்பனை, பாலியல் தொழில் மையம், எதனோல் விற்பனை அல்லது வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றேனா என்பது யாருக்கும் தெரியாது என அவர் தெரிவித்தார்.

எனவே, தெரியாத எவரையும் வணங்குவதனை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.மேலும், அரசியல்வாதிகள் வணங்கப்படக் கூடியவர்கள் அல்லர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசியல்வாதிகளை கௌரவப்படுத்துவதில் தவறில்லை, கை கூப்பியோ அல்லது கைலாகு செய்தோ எமது மரியாதையை செலுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மண்டியிட்டு வணங்க வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7-10)

# அரசியல் கண்ணோட்டத்தோடு நோக்காமல் நாடு என்ற ரீதியில் சிந்தித்து செயற்படுங்கள்

## ஜெனிவா அறிக்கை குறித்து தயாசிறி அறிவுரை

சர்வதேச விசாரணை என்ற நிலையிலிருந்த பிரச்சினை தற்போது தேசிய ரீதியாக்கப்பட்டுள்ளது. அரசியல் கண்ணோட்டத்தோடு நோக்காமல் நாடு என்ற ரீதியில் சிந்தித்து ஜெனிவா அறிக்கை கையாளப்பட வேண்டியது முக்கியமாகும் என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாடு, ஜனநாயகத்தை பாதுகாத்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருமே ஏற்றுக் கொள்ளக்கூடிய செயற்பாடுகளே முக்கியமாகிறது என குறிப்பிட்ட அமைச்சர், எவரையும் காட்டிக் கொடுத்து செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. அமைச்சர் மஹிந்த அமரவீரவும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தொடர்ந்து விளக்கமளித்த அமைச்சர், ஜெனிவா அறிக்கையை விட மக்ஸ்வல் பரணகம அறிக்கை கடுமையாகவுள்ளது. சரவதேச நிபுணர்கள் ஆலோசனைகள் பெறுவது தொடர்பிலும் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

தற்போதைய ஜெனிவா மனித உரிமைப் பேரவை அறிக்கை இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு அமையவே விசாரணைகளை முன்னெடுக்க வழிவகுத்துள்ளது. இதனால் சர்வதேச ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு எம்மால் சுயாதீனமாக அந்த விவகாரங்களைக் கையாள முடியும்.

இன்று இல்லாவிடில் இன்னும் நான்கு அல்லது ஐந்து வருடங்களிலோ இப்பிரச்சினைக்கு நாம் தீர்வு காண வேண்டும்.அதனால் இப்போதுள்ள இந்த சந்தர்ப்பத்தை நாம் முறையாகப் பயன்படுத்திக் கொள்வது முக்கியமாகும்.

இஸ்ரேல் போன்ற பல நாடுகளிலும் இதுபோன்ற பிரச்சினைகள் இருந்தன. அந்த நாடுகள் புத்திசாதுர்யமாக செயற்பட்டு அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொண்டுள்ளன என்பதை நாம் உணர வேண்டும்.

நாட்டின் நல்லிணக்கம், ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக் கொண்டு தமிழ் சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருமே ஏற்றுக் கொள்ளக் கூடிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது.

நாட்டின் ஒருமைப்பாடு, இறைமை, கட்புல ஒருமைப்பாடு என்பவற்றில் கவனம் செலுத்துவதோடு குறிப்பாக கிராமிய மக்களுக்கு இது தொடர்பில் தெளிவு ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

எவரையும் காட்டிக் கொடுத்து செயற்பட வேண்டிய தேவை கிடையாது. ஐ.நா. நிறுவனத்துக்கு முன்னால் அமர்ந்து உண்ணாவிரதம் செய்தோ கூக்குரலிட்டு ஆர்ப்பாட்டங்கள் செய்வதோ பிரயோசனமில்லை. இதனை புத்தியாக செயற்பட்டு தீர்க்க வேண்டியுள்ளது.

நாம் எமக்குக் கிடைத்த ஆலோசனைகள் வாய்ப்புகளை முறையாக பயன்படுத்திக் கொள்ளாமையே இந்த பிரச்சினை உக்கிரமடையக் காரணம். இப்போதாவது இது விடயத்தில் நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும் சர்வதேச மட்டத்தில் தீர்க்க வேண்டிய பிரச்சினையை உள்ளக ரீதியில் தீர்க்க முடியும் என்ற நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.(இ-7-10)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சு.க.வெற்றிக்காக உழைப்பேன்

## ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலை வெற்றி கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை தாங்கி உழைப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கும் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நான் தலைமை தாங்குவதில் எங்களுக்குள் எந்த பிரச்சினையும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

கடுவலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காரியாலயம் ஒன்றை நேற்று முன்தினம் மாலை திறந்து வைத்து உரையாற்றுகை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீல.சு.கட்சி வெற்றி பெற வேண்டும். அதற்காக கட்சிக்கு தலைமை தாங்கி செயற்படுவேன். சு.க.தோல்வியடைவதை நான் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட் டேன்.

கடந்த இரண்டு தேர்தல்களிலும் எமது கட்சி தோல்வியுற்றதை ஏற்றுக்கொள்வதுடன் அதற்கான காரணத்தை கண்டறிந்து கட்சியை வெற்றிப்பாதைக்கு கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நல்லாட்சி வெற்றி பெறவேண்டுமென்றால் சர்வகட்சி முறைமை செயற்படவேண்டியது கட்டாயமாகும். அத்துடன் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தனிநபர்களை குற்றம் சுமத்துவதற்கு பதிலாக வெற்றிபெற்ற ஜனநாயக நாடொன்றில் இடம்பெறும் கொள்கை தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறவேண்டும் என்பதுடன் ஊழல் மோசடி மற்றும் வீண்விரயமற்ற உறுதிமிக்க மக்கள் தொடர்பாடலொன்றை மேற்கொள்ளும் பிரதிநிதிகளையே மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மேலும் அடுத்துவரும் இரண்டு மாதங்களுக்குள் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வேட்பாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும். அத்துடன் இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொகுதிவாரியாகவே நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில் நுட்பங்கள்–67

## பப்பாசியில் பூ, காய் அழுகலும் இலை மஞ்சளாதலும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

குறுநில மன்னர்களின் வாழ்க்கை போல சிறிய விவசாயிகளின் வாழ்க்கையும் இடர் காலத்தின் பின்னரான வாழ்வாதாரமும் அமைந்துவிட்டது. எமது மக்களின் வாழ்வாதாரத்தையும் குறிப்பாக வருவாயையும் பெருக்கும் நோக்கத்திற்காக விவசாய செய்கையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. காலநிலை மாற்றம் இயற்கையின் திருவிளையாடல் எனினும் நாமும் அதற்கு இயைந்து எமது பயிர்ச்செய்கையை திட்டமிட வேண்டியிருக்கின்றது. இயற்கையை பகைத்து எதுவும் ஆகப் போவதில்லை என்பதனை எமது விவசாய பெருமக்கள் நன்கே உணர்ந்திருக்கின்றனர். இந்நிலையில் காலநிலையினால் ஏற்படுத்தப்படும் மாற்றங்களை துல்லியமாக கணிப்பிட்டு அதன்மூலம் நடைபெற இருக்கும் இயற்கையின் விளைவுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் விவசாயப் பெருமக்களுக்கு தகுந்த பலனைக் கிடைக்கவழிசெய்யலாம்.

அதிகமான இடங்களில் தற்போது பப்பாசி செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. மக்கள் ஆர்வத்துடன் பப்பாசியை வீட்டுத்தோட்டங்களிலும் இன்னும் தோட்டநிலங்களிலும் பயிரிட்டு வருகின்றனர். இதில் பப்பாசி செய்கையை மக்கள் முன்னெடுப்பதற்கு முக்கிய காரணமாக அதற்கான தேவை அதிகரித்துள்ளமையாகும். ஐஸ்கிறீம் உற்பத்தியிலும் பழக்கலவை உற்பத்தியிலும் பப்பாசிபழத்தை அதிகமாக பயன்படுத்துவத னால இந்தகேள்வி அதிகரித்துள்ளமையை குறிப்பிட்டாலும்பழத்தை உண்ணும் பழக்கத்தை மக்கள் முழுமையான தேவையானதாக கருதும் போது இதன் கேள்வி இன்னும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன. அதிகளவில் உள்ளீடுகளில் தங்கி பயிர் செய்யப்படும் பழப் பயிராக பப்பாசியை மக்கள் வளர்க்க ஆரம்பித்து விட்டமையையும் அவதானிக்க முடிகின்றது. இதற்கு பயன்படுத்தப்படும் இனங்கள் குறிப்பாக ரெட்லேடி உள்ளீடுகளில் தங்கியிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும்.

பப்பாசி பயிர் செய்யப்பட்ட இடங்களில் அதனது பூவில், காய்களில் அழுகலும் இன்னும் இலை மஞ்சளாதலும் அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மன்னார் பகுதியில் ஈச்சம்பத்தை எனுமிடத்திலும் யாழ்ப்பாணம் மருதனார்மடப்பகுதியிலும் இவ்வாறான பிரச்சினைகள் உணரப்பட்டிருந்தாலும் அநேகமான பப்பாசி பயிர் செய்யும் இடங்களில் இப் பிரச்சினைகள் காணப்பட்டதனையும் விவசாய பெருமக்களிடமிருந்து அறிய முடிகின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கான காரணிகளை முதலில் இனங் காணுதல் அவசியமாகும்.



**பப்பாசி இலைமஞ்சளாதல்:**

பப்பாசி இலைமஞ்சளாவதற்கு ஒருவகை சிற்றுண்ணி காரணமாகும். சிற்றுண்ணியை வெற்றுக்கண்ணால் காண்பது சிரமமாக இருக்கும். அதனால் பப்பாசியை பயிர் செய்பவர்கள் சிற்றுண்ணியின் தாக்கத்தை அதன் இலை மஞ்சளாவதிலிருந்தே இனங்காண முடியும். பப்பாசியின் கீழுள்ள இலையிலேயே முதலில் மஞ்சளாதல் காணப்படும். பின்னல் கீழிருந்து மேலாக மஞ்சளாதல் விருத்தியடையும். ஓரளவு வளர்ந்துள்ள பப்பாசியில் இவ்வாறான மஞ்சளாதல் பொதுவாக காணப்படுவதனால் இதனை பரந்தளவில் நடுகை செய்தவர்களுக்கு இந்த தாக்கம் அதிகமானதாகவே தெரியும். இந்த தாக்கத்தை அல்லது சேதத்தை தவறாக இனங்காண்பவர்கள் தேவையற்று பூச்சிநாசினியை விசிறுவதை காணமுடிகின்றது. பலருடைய பப்பாசி மரத்திற்கு பூச்சிநாசினிகள் வகை தொகையின்றி தெளிக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. தயவுசெய்துபரிந்துரை செய்பவர்கள் பிரச்சினையை சரியாக இனங்காணாது தவறாக பரிந்துரை செய்ய வேண்டாம். இது நட்டப்பட்ட விவசாயிகளை இன்னும் சோதிப்பதாகவே முடியும். இவ்வாறான மஞ்சளாதல் பொதுவாக தழைச்சத்து குறைபாடால் வருவதாயினும் இங்கே குறிப்பிட்டு தோன்றியிருக்கின்ற மஞ்சளாதல் சிற்றுண்ணியின் தாக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டதனால் இதற்காக சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்தும் சிற்றுண்ணி நாசினியையே பயன்படுத்த வேண்டும். அபமெக்ரின் கலவைகள், எதுவாயினும் பயன்படுத்தி சிற் றுண்ணியைக் கட்டுப் படுத்த முடியும். சிற்றுண்ணியின் தாக்கம் அநேகமாக வெப்பநிலை அதிகரித்திருக்கும் போதே அதிகமாக இருக்கும். ஏனெனில் அதிகரிக்கும் சூழல் வெப்பநிலைக்கு இயைபாக சிற்றுண்ணி பெருக்கமும் இருப்பதனால் மஞ்சளாதல் வெப்பநிலைஅதிகரித்திருக்கும் போது அதிகமாகவும் விரைவாக பரவுவதாகவுமிருக்கும். ஆனால் தற்போது மழைபெய்ய தொடங்கியிருப்பதனால் இந்த சிற்றுண்ணியின் தாக்கம் குறைவாகவே இருக்கும். ஆனால் இதனை அலட்சியம் செய்யாது பீடையின் பெருக்கத்தை குறித்து வைத்திருக்க வேண்டும். பின்னர் இதுபற்றி திட்டமிடமுடியும்.

**பப்பாசி பூ காய்கள் அழுகி உதிர்தல்:**

பப்பாசியில் பூ மற்றும் காய்கள் அழுகுதல் என்பது ஒருவகை பூச்சியின் தாக்கத்தின் விளைவாகவே இருப்பதை உணரலாம். மிகவும் சிறியவண்டின் தாக்கமாகவே இந்தஅழுகுதல் ஏற்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. பூக்களை விரித்து வண்டினை பார்ப்பதன் மூலம் இனங் காணலாம்.

வெற்றுக்கண்ணால் பார்ப்பதற்கு தெரிந்தாலும் கைவில்லையின் உதவியுடன் பூச்சியினாலான பிரச்சினையை இனங் கண்டுபரிந்துரை செய்யலாம். பூச் சியினை இனங்காண முடிந்தால் அதனை கட்டுப்படுத்துவதற்கான பூச்சிநா சினியை பரிந்துரை செய்யலாம். வண்டு வகைப் பூச்சியாக இருப்பதனால் இதற்கு தொடுகை நாசினி சிறந்ததாகும்.

பூச்சியைப் பற்றிய முழு விபரத்தையும் அதனை ஆய்வுகூட பரிசோதனையின் பின்னர் அறிவிக்க முடியும். பப்பாசியில் தற்போதைக்கு இவ்விரு பிரச்சினைகளுமே முக்கியமானதாக இருக்கின்றன. இவற்றை கட்டுப்படுத்த முடிந்தால் பப்பாசிசெய்கையை இலகுவாக செய்ய முடியும்.

மழை காலத்தில் அதிகளவில் பிரச்சினைகளைதோற்றுவககாது. எனினும்வெப்ப நிலை அதிகரிக்கும் போது மீண்டும் இப்பிரச்சினை தலைதூக்க வாய்ப்பிருக்கின்றது.

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 64**

# காஷ்மீரில் லஷ்கர்-இ-தொய்பா தளபதி சுட்டுக்கொலை



இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் குல்காம் மாவட்டத்தில் நேற்று முன்தினம்வியாழக்கிழமை நடைபெற்ற சுற்றிவளைப்பில் லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பின் தளபதி அபு காசிம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக காஷ்மீர் பொலிஸ் ஐ.ஜி. கிலானி செய்தியாளர்களிடம் கூறும்போது, " குல்காம் மாவட்டம் கண்ட்யாபூர் கிராமத்தில் பதுங்கியிருந்த லஷ்கர்- இ-தொய்பா தளபதி அபு காசிமை பாதுகாப்புப் படையினர் சுட்டு கொன்றுள்ளனர்.

காஷ்மீரில் கடந்த 3 ஆண்டுகள் நடந்த பெரிய தாக்குதல்களுக்கு மூளையாக செயற்பட்டவர் அபு காசிம்.

அண்மையில் பந்திபூரா மாவட்டத்தில் நடந்த பெரிய மோதலின்போது அல்தாப்அகமது என்ற பொலிஸ்காரரை அபு காசிம் சுட்டுக் கொன்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# ஐ.ஒன்றியத்தை விட்டு விலகினால் பொருளாதார தடை விதிக்கப்படும்

## பிரித்தானியாவிற்கு அமெரிக்கா எச்சரிக்கை

**ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகினால், அந்நாட்டுடன் அமெரிக்கா கொண்டுள்ள அனைத்து வர்த்தக பரிமாற்றங்களுக்கு தடைவிதிக்கப்படும் என அமெரிக்க வர்த்தக துறை கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அமெரிக்க வர்த்தக துறை பிரதிநிதியான மைக்கேல் போர்மன் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், ஐரோப்பிய நாடுகளின் கூட்டணியில் இருந்து பிரித்தானியா பிரிந்து செல்வதற்கு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

எதிர்காலத்தில் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலகினால். அந்நாட்டுடன் தனியாக தடையற்ற வணிக உடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியாது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் தற்போது வர்த்தக பரிமாற்றங்கள் நடந்து வரும் நிலையில், பிரித்தானியா பிரிந்து சென்றால் அதற்கான புதிய விதிமுறைகளை வகுத்து வர்த்தகத்தை தொடர முடியாது.

அவ்வாறு வர்த்தகத்தை தொடர முடியுமென்றால், சீனா, பிரேசில், இந்தியா போன்ற நாடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டண விதிமுறைகள் தான் பிரித்தானியாவிற்கும் பொருந்தும் என மைக்கேல் போர்மன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2014ம் ஆண்டில் மட்டும் சுமார் 54 பில்லியன் டொலர் மதிப்புள்ள சரக்குகளை பிரித்தானியாவிடமிருந்து இறக்குமதி செய்திருப்பதால், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து அந்நாடு விலகினால் அது அமெரிக்காவை வெகுவாக பாதிக்கும் என்பதால் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.




ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவது குறித்து எதிர்வரும் 2017ம் ஆண்டு இறுதி முடிவு எடுக்கப்பட உள்ள நிலையில், தற்போதைய கருத்துக்கணிப்புகளில் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலகுவதையே பிரித்தானிய மக்கள் விரும்புவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (3-7)

# அமெரிக்காவில் விமானம் விபத்து 101 பயணிகள் உயிர்பிழைத்தனர்

அமெரிக்காவில் பயணிகள் விமானம்திடீரென தீப்பற்றிகொண்டு எரிந்த விபத்தில் 15 பயணிகள் காயமடைந்தனர்

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள போர்ட் லவுடர்டேல் ஹொலிவுட் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து டைனமிக் விமானப் போக்குவரத்து நிறுவனத்துக்கு சொந்தமான போயிங் 767 என்ற விமானம் புறப்பட தயாராக இருந்தது.

இந்த விமானத்தில் 101 பயணிகள் இருந்ததாக கூறப்படுகிறது. அப்போது விமானத்தின் இயந்திரத்தில் தீப்பற்றியதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக விமானத்தில் இருந்து பாரிய அளவில் புகை வந்தது.



விமானத்தில் தீப்பற்றியதையடுத்து பயணிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர். சுமார் 15 பேர் காயமடைந்ததாக கூறப்படுகிறது. மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்த தேசிய போக்குவரத்து பாதுகாப்பு அமைப்பு உத்தரவிட்டுள்ளது. இந்த சம்பவத்தில் அங்கு சிறிது பரபரப்பு ஏற்பட்டது. (3-7)

# பெற்றோர் ஒரு குழந்தை மட்டும் பெற்றுக்கொள்ளும் சட்டம் ரத்து

## சீன அரசு அதிரடி அறிவிப்பு

பெற்றோர்கள் ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சர்ச்சைக்குரிய சட்டத்தை உடனடியாக ரத்து செய்யவுள்ளதாக சீன அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.

உலக மக்கள் தொகையில் முதலிடத்தில் உள்ள சீனா, கடந்த 1979ம ஆண்டு ஒரு புதிய கொள்கை முடிவுகளை நடைமுறைப்படுத்தியது.

இதன் மூலம், சீனாவில் உள்ள பெற்றோர்கள் ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருந்தது.

இதனை மீறிஇரண்டுகுழந்தைகள் பெற்றுக்கொள்ளும் பெற்றோர்களுக்கு தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது. சில நேரங்களில் 'பலவந்தமாக கருக்கலைப்பிற்கும் தாயார்கள் உட்படுத்தப்பட்டனர்.

சுமார் 35 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த இந்த சட்டத்தை ரத்து செய்ய சீன அரசு முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு அரசு செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம், சீனாவில் உள்ள அனைத்து பெற்றோர்களும் சட்டரீதியாக இரண்டு குழந்தைகளை பெற்றுக் கொள்ளலாம்.

சர்ச்சைக்குரிய சட்டத்தால் சீனாவில் கடந்த 35 ஆண்டுகளில் 400 மில்லியன் குழந்தைகள் பிறப்பது தடுக்கப்பட்டது.

ஆனால், ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக்கொள்வதால், அந்நாட்டில் உள்ள பொதுமக்களின் முதுமையினால் எழும் பிரச்சினைகளை தவிர்க்கவே இந்த சட்டத்தை ரத்து செய்ய உள்ளதாக செய்திகள் வெளியா கியுள்ளன. (3-7)

### சர்ச்சைக்குரிய தீவு அருகே போர்க்கப்பல்

# அமெ.- சீன உயர்மட்ட அதிகாரிகள் வீடியோ மூலமாக பேச்சுவார்த்தை

**தென் சீன கடற்பகுதியில் சீனா அமைத்துவரும் செயற்கை தீவு அருகே அமெரிக்காவின் போர்க்கப்பல் நிறுத்தப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை குறித்து அமெரிக்க - சீன உயர்கடற்படை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.**



யு.எஸ்.எஸ் லாசன் என்ற போர் கப்பல் ஸ்பார்ட்லி தீவு அருகே 12 கடல் மைல் தூரத்தில் ரோந்து சென்றது. அந்தப் பகுதி சீனாவுக்கு உட்பட்ட பகுதி இல்லை என்றாலும் அது சீனாவால் அமைக்கப்பட்ட செயற்கை தீவு அந்த பகுதியில் உள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை சீனா கடுமையாக கண்டித்தது. மேலும் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் சர்ச்சைக்குரிய தீவு அருகே அமெரிக்க போர்க்கப்பல் சென்றது குறித்து அமெரிக்க - சீன உயர்கடற்படை அதிகாரிகள் வீடியோ மூலமாக நேற்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அமெரிக்க சார்பில் அட்மிரல் ஜோன் ரிச்சர்ட்சன் மற்றும் சீன கடற்படை சார்பில் அட்மிரல் வு ஷென்க்லி ஆகியோர் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினர்.

இந்த பேச்சுவார்த்தை பற்றி அமெரிக்க கடற்படை செய்தித் தொடர்பாளர் லெப்டினனட் டிம் ஹாக்கின்ஸ் கூறுகையில், இந்த பேச்சுவார்தை பயனுள்ளதாகவும், சிறப்பாகவும் இருந்தது என்று கூறியவர் பேச்சுவார்தை பற்றிய தகவல்களை வெளியிட மறுத்து விட்டார். (3-7)

### ஓசாமா பின்லேடனை கொல்வதற்கு

## பாக். அனுமதியின்றி அமெரிக்கா தாக்குதல் நடத்தியது சரியா?



பின்லேடன் கொலையில் ஒபாமாவுக்கு சட்ட வழிமுறைகள் வகுத்து தந் தது 4 சட்டத்தரணிகள்தான் என்பது உள்ளிட்ட ரகசிய தகவல்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

பின்லேடன் கொலை தொடர்பாக 5 சட்ட ஆலோசனை குறிப்பாணைகளை தயார் செய்திருக்கிறார்கள். அதை உச்சகட்ட பாதுகாப்புமிக்க லப்டொப்புகளில் பதிவேற்றம் செய்து, நம்பிக்கைக்குரிய தூதுவர்கள் மூலம் கொடுத்து அனுப்பி உள்ளனர்.

பின்லேடனை கொல்வதற்கு சில தினங்களுக்கு முன் பென்டகன் சட்டத்தரணி ஜெஹ் ஜான்சன், பாகிஸ்தானுடன் போர் தொடுக்காத நிலையில், அந்த மண்ணில், அந்த நாட்டு அரசின் அனுமதியின்றி தாக்குதல் நடத்தினால், அது சர்வதேச சட்டத்தை மீறிய செயல் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால்பின்லேடனை கைது செய்யுமாறு பாகிஸ்தானை கூறினாலோ அல்லது அமெரிக்க தாக்குதலுக்கு அனுமதியை நாடினாலோ அது அமெரிக்காவின் திட்டத்தில் சமரசம் செய்து கொள்வது போலாகிவிடும்என வெள்ளை மாளிகை கருதியது: பாகிஸ்தான் உளவுத்துறைக்கு பின்லேடன் அவசியம் என்று கருதி, அவர் தப்பி செல்வதற்கு அந்தநாட்டு அரசின் உதவியை நாடிவிடக் கூடும்எனவும் வெள்ளை மாளிகை அஞ்சியிருக்கிறது.

பாகிஸ்தானுக்குள் அந்த நாட்டின் அனுமதியின்றி ஏதேச்சதிகாரமாக அமெரிக்க ராணுவம் ஊடுருவுவதை விதிவிலக்காகக் கொள்ளலாம் என சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர். கூட்டுப்படைகளின் சட்ட ஆலோ சகர் ரியர் அட்மிரல் ஜேம்ஸ் கிராபோர்டுதான். பின்லேடனை கொன்றால், அவரது உடலை கடலில் புதைப்பது மத ரீதியில் ஏற்கத்தக்க ஒன்றுதான் என கூறி உள்ளார். ஒட்டுமொத்தமாக சட்டத்தரணிகள் விவாதித்து, பின்லேடனின்உடலை அவரது சொந்த நாடான சவுதி அரேபியா கேட்டால் கொடுத்து விடலாம், சவுதி அரேபியா ஏற்க மறுத்து விட் டால் கடலில் புதைத்து விடலாம் என முடிவுக்கு வந்து கூறியுள்ளனர்.

எதிர்பார்த்ததுபோன்றே பின்லேடனின் உடலைப் பெற்றுக்கொள்ள சவுதி அரேபியா மறுத்து விட்டது. அதன் பின்னர்தான் பின்லேடன் கொல்லப்பட்டு, உடல் கடலில் புதைக்கப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் பின்லேடன் கொல்லப்பட்டு 4 ஆண்டுகள் முடிந்த நிலையில் கசிந்து, ‘தி நியூயோர்க் டைம்ஸ்’ பத்திரிகையில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (3-7)

## சிம்பாவேயில் விஷம் கொடுத்து 60 யானைகள் கொலை




சிம்பாப்வே நாட்டில் விலங்குகள் சட்டத்திற்கு புறம்பாக வேட்டையாடப்படுவது தொடர்கதையாகி வருகிறது. இதற்கு அந்நாட்டு வனவிலங்கு அதிகாரிகள் சிலரே உடந்தையாக இருப்பதாகவும் கூறப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தற்போது மேலும் 23 யானைகள் தந்தத்திற்காக விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருப்பதாகவும், கடந்த 2 மாதங்களில் இப்படிக் கொல்லப்பட்ட யானைகளின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளதாகவும் சிம்பாப்வே தேசிய பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு நிர்வாக ஆணையத்தின் தலைவர் ஆல்வின் தெரிவித்துள்ளார்.

யானைகள் சிறுநீர் கழிக்கும் துளையில் இது போன்று சயனைடை வைத்து, கடந்த வருடம் 300 க்கும் மேற்பட்ட யானைகள் சிம்பாப்வேயில் கொல்லப்பட்டது குறிப் பிடத் தக்கது. (3-7)

## நடிகர் விவேக்கின் மகன் மரணம்



பிரபல நகைச்சுவை நடிகர் விவேக்கின் மகன் உடல்நலக்குறைவால் நேறறு மரணமடைந்தார்.

இவரின் மகன் பிரசன்னா (வயது-13) கடந்த ஒன்றரை மாதமாக மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயி ரிழந்தார்.

இவரது உடல் விவேக்கின் சொந்த ஊரான திருநெல்வேலிக்கு கொண்டு செல்லப்படுகிறது. நோய் வாய்ப்பட்டிருந்த மகனுக்காகவே சமீபகாலமாக விவேக் திரைப்படங்களை தவிர்த்து வந்ததாகவும் கூறப்படுகிறது. (3-7)

## ஐ.நா. மனிதவுரிமைகள் சபை தேர்தலில் பாகிஸ்தான் தோல்வி

(நியூயோர்க்)

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பினருக்கான தேர்தலில் பாகிஸ்தான் தோல்வி அடைந்துள்ளது. இது அந்த நாட்டிற்கு ஏற்பட்ட மிகப் பெரிய பின்னடைவாக கருதப்படுகிறது.

மனித உரிமைகள் சபையில் மொத்தம் 47 உறுப்பினர்களுக்கு இடங்கள் உள்ளன. இதில், எதிர் வரும் டிசம்பர் 31ஆம் திகதியுடன் பாகிஸ்தனின் உறுப்பினர் பதவிக் காலம்முடிகிறது. இத்துடன்சேர்த்து 18 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதற்கான வாக்கெடுப்பில் ஐ.நா. சபையில் உறுப்பினர்களாக உள்ள 193 நாடுகள் கலந்து கொண்டன.

இரகசிய வாக்கெடுப்பு முறையில் நடத்தப்பட்ட இந்த தேர்தலில் பாகிஸ்தான் 105 வாக்குகளை மட்டுமே பெற்று தோல்வி அடைந்தது. பாகிஸ்தானின் தோல்வியை ‘யு.என்.வாட்ச்’ என்ற மனித உரிமை அமைப்பு வரவேற்றுள்ளது. மேலும் பாகிஸ்தானில் மிகப் பெரிய அளவில் மனிதவுரிமை மீறல்கள் நடைபெற்று வருவதாகவும் அந்த அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது. (3-7)

## பாக். புனிதப் போர் எனும் பெயரில் கோழைத்தனமாக செயற்படுகிறது

பாகிஸ்தான் புனிதப் போர் எனும் பெயரில் கோழைத்தனமான செயல்களில் ஈடுபடுவதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது. அண்டை நாடுகளுடன் குறுகிய மனப்பான்மையுடன் செயல்படுவதை பாகிஸ்தான் கைவிட வேண்டும். பாகிஸ்தானின் செயற்பாடுகள் காரணமாக தெற்கு ஆசியாவில் அச்சுறுத்தல் நிலவுகின்றது. இச்சூழல் மாறும்வரை இந்தியா- பாகிஸ்தான் இடையே பேச்சுவார்த்தை நடக்க வாய்ப்பில்லை என்றார். (3-7)

## கடலில் கவிழ்ந்தது படகு 242 அகதிகள் மீட்பு





கிரேக்கத்தின் லெஸ்போ தீவுக்கு அருகில் கடந்த புதனன்று அகதிகள் சென்ற மரப்படகு மூழ்கியதில் அதில் பயணித்த 242 பேரை கிரேக்க கடலோர காவற்படையினர் மீட்டுள்ளனர்.

எனினும் இரு சிறுவர்கள் உட்பட குறைந்தது மூவர் கடலில் மூழ்கி பலியாகியுள்ளனர். "எத்தனை பேர் காணாமல்போயிருக்கிறார்கள என்பதை இன்னும் எம்மால் உறுதி செய்ய முடியாதுள்ளது" என்று கடலோர படையினரின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இதில் தேடுதலின்போதே மூழ்கிய மூவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி தொடக்கம் கிரேக்க தீவுக்கு 5000க்கும் அதிகமான அகதிகள் சென்றடைந்துள்ளனர். இவர்கள் மத்திய மற்றும் வட ஐரோப்பாவை நோக்கி தஞ்சம் கோரி பயணித்து வருகின்றனர்.

கடந்த பல தசாப்தங்களில் ஐரோப்பா சந்தித்த மோசமான அகதிப் பிரச்சினை இதுவென கருதப்படுகிறது. துருக்கி கடற்கரையில் இருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் லெஸ்போ தீவு அகதிகளின் ஐரோப்பாவுக்கான வாயிலாக மாறியுள்ளது. (3-7)


யாழ்ப்பாணம் கொற்றாவத்தை அயிட்டியபுலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய சுற்றுக் கொட்டகைக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது. ஆலய திருப்பணிச் செயலாளர் க.தர்மதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், கௌரவ விருந்தினராக ஆலய போசகர் பொ.சின்னராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.




மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனத்தின் 46ஆவது ஆண்டு நிறைவையும் மேக்ஸ் கிளினிங் சேவையின் 12ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு மேக்கன்ரைல் மற்றும் மேக்கஸ் ஊழியர்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டி அண்மையில் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுமைதானத்தில் இடம்பெற்றபோது...



சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் சி.கஜனின் புதல்வன் க.அபிஷேக் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் கௌரவிப்பை மேற்கொண்டனர். நீர்கொழும்பு கோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டல் நிர்வாக இயக்குநரும் லயன்ஸ் கழக பிராந்திய இணைப்பாளருமான லயன் தேவா பீற்றர் சித்திபெற்ற மாணவனைக் கௌரவித்தார்.



ஊரெழு கே.எம்.ஐ.கல்வி நிறுவனத்தின் வாணிவிழா நிகழ்வுகள் அண்மையில் நிலையத்தின் நிர்வாக இயக்குநர் எஸ்.சர்மிலன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் 2015ஆம் ஆண்டில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த கே.எம்.ஐ.கல்வி நிறுவன இரு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்த போது... (படம்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



யாழ்.வடஇந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் தின விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கௌரவிக்கப்பட்ட விருந்தினர்கள், ஆசிரியர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம். (படம்:-கரணவாய் செய்தியாளர்)



யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரியர் தின விழா, பாதபூஜை நிகழ்வு என்பன அண்மையில் நடைபெற்றபோது...





யாழ்.சில்லாலை றோ.க.த.க பாடசாலையின் வாணி விழா அண்மையில் நடைபெற்றது. இதன் போது நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்தனது 2015ஆம் ஆண்டின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து 50 பிளாஸ்ரிக் கதிரைகளை பாடசாலை அதிபரிடம் அன்றைய தினம் கையளித்திருந்தார்.

# ராணுவத்தினருக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் விவகாரம் தொடர்பாக இராணுவத்தினர் போதுமான ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**


படுகொலை செய்யப்பட்ட சிங்கள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பாக அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட தாக்கல் செய்துள்ள மனுமீதான விசாரணை நேற்று முன்தினம் ஹோமாகம நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது அரச தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் இராணுவத்தினர் மற்றும் தொலைபேசி நிறுவனம் ஆகிய தரப்புகள் சீ.ஐ.டி. யினருக்கும் நீதிமன்றத்திற்கும் போதுமான ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

இதனையடுத்து போது மான ஒத்துழைப்புகளை வழங்கு மாறு இராணுவத்தினருக்கு மீண்டும் அறிவுறுத்திய ஹோமாகம நீதிமன்ற நீதிபதி ஆர்.பி. நெளுந்தெனிய, தொலைபேசி நிறுவன சட்ட ஆலோசகருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பவும் உத்தர விட்டுள்ளார். (இ-7-10)

# விசாரணைகளை மட்டுமே அரசு முன்னெடுக்கின்றது!

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



பொலிஸ் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணைகள் தவிர தேசிய அரசாங்கத்தில் சொல்லிக்கொள்ளும்படியாக எதுவும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச விமர்சித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப் பொன்றின் போது தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள விமல் வீரவன்ச,

அதிகளவிலான பெறுமதியை நாட்டுக்கு தேடித்தருவதாக வாக்களித்து பதவிக்கு வந்தவர்கள் இன்று டொலருக்கு அதிகூடிய பெறுமதியை தேடிக் கொடுத்துள்ளார்கள்.

அத்துடன் சீ.ஐ.டி, நிதி மோசடிகள் தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவு, ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் விசாரணைகள் தவிர இந்த அரசாங்கத்தில் உருப்படியாக எந்தவொரு விடயமும் நடைபெறுவதாக தெரியவில்லை என்றும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே கடவுச்சீட்டு விவகாரம் தொடர்பாக தான் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (இ-7-10)

# கொண்டயாவுக்கு ஆதரவாக செயற்படும் சட்டத்தரணிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொட்டதெனியாவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளான கொண்டயா சார்பில் செயற்படும் சட்டத்தரணிகளுக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

கொட்டதெனியாவ சிறுமி சேயா படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கொண்டயா எனப்படும் துனேஷ் பிரியசாந்தவை ஆதாரபூர்வமான குற்றவாளியாக சித்திரித்திருந்த பொலிஸார் , அவரை சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கியிருந்தனர்.

எனினும் மரபணு பரிசோதனையின் ஊடாக குற்றமற்றவர் என இனம்காணப்பட்டு நீதிமன்றம்மூலம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அநியாயம் இழைக்கப்பட்ட கொண்டயா எனப்படும் துனேஷ் பிரியசாந்தவுக்கு ஆதரவாக உதுல் பிரேமரத்ன தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவொன்று மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.இந்நிலையில் துனேஷ் பிரியசாந்தவுக்கு ஆதரவாக செயற்படும் சட்டத்தரணிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் கம்பஹா, பெலும்முல்லை பிரதேசத்தில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றுள்ளது.உதுல் பிரேமரத்ன உள்ளிட்ட சட்டத்தரணிகள் வெளிநாட்டு தன்னார்வ நிறுவனங்களின் நிதியில் செயற்படுவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-7-10)

# உயிரை பாதுகாத்து கொள்ள அமைக்கப்பட்ட பதுங்கு குழியில் தொலைக்காட்சி எதற்காக?

## பாலித ரங்கே பண்டார கேள்வி



உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைக்கப்பட்ட பதுங்கு குழியில் தொலைக்காட்சி எதற்கு என அமைச்சர் பாலித ரங்கே பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

அவசர நேரத்தில் பாதுகாப்பாக இருப்பதற்காகவே பதுங்கு குழி அமைக்கப்படுகிறது.

மாதக் கணக்கில் வருடக் கணக்கில் பதுங்கியிருக்க பதுங்கு குழி அமைக்கப்படுவதில்லை.

வான் தாக்குதல் அல்ல வேறும் எந்த தாக்குதல் நடத்தப்பட்டாலும் மூன்று நான்கு மணித்தியாலங்களுக்கு அதிகமாக பதுங்கியிருக்க வேண்டியதில்லை.

எமது நாட்டில் மிகவும் பலம் பொருந்திய இராணுவமொன்று இருக்கையில் இவ்வாறு நிரந்தரமான பதுங்கு குழி அமைக்க வேண்டிய அவசியமில்லை.

ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டிருந்தது பதுங்கு குழியல்ல, அது ஓர் மாளிகை.

பதுங்கு குழிகளில் சோபா, ஏ.சீ மற்றும் தொலைக்காட்சி வசதிகள் இருக்காது என அமைச்சர் பாலித ரங்கே பண்டார கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## கவிதையில் தெரியும் காட்சி

நாம் யார்? நம்முடைய தகுதி என்ன? என்ற நினைப்பு நமக்கு எப்பொழுதும் இருக்க வேண்டும்.

தகுதி மீறிய நினைப்பு பல சமயங்களில் நம்மை சிக்கலில் கொண்டு போய் விடும்.

ஒரு பூனை இருந்தது.

அது தன்னை ஒரு புலியென்று நினைத்துக் கொண்டது. தன்னைப் பற்றிய தகுதிக்கு மீறிய நினைப்பில் அந்தப் பூனை நடந்து போய்க் கொண்டிருந்தது.

அப்பொழுது வழியில் ஒரு பெரிய யானை அமைதியாக நின்று கொண்டிருந்தது.

அந்த யானை பொறுமையாக நின்று கொண்டிருந்ததால் இந்த பூனைக்கு அதனிடம் போய் வாலாட்டிப் பார்க்கலாம் என்று ஒரு ஆசை.

உலக இயல்பு தானே இது!

இந்த பூனை யானையின் பக்கமாக போய் அதை சுற்றி சுற்றி வந்தது.உற்றுப் பார்த்தது.வாய் துறு துறுத்தது.வம்பு வழக்க ஆரம்பித்தது.

"எல்லோருக்கும் ஒரு பக்கம் தான் வால் இருக்கும். ஆனால் உனக்கு என்ன இப்படி இரண்டு பக்கமும் வால் இருக்கிறது" என்றது.

இருந்தாலும் யானை பொறுமையாக பதில் சொன்னது.

"அப்படியில்லை! பின்னால் இருக்கிறது தான் வால்.முன்னால் இருப்பது தும்பிக்கை!" என்றது.

பூனை விடுவதாக இல்லை.

"அது சரி! தும்பிக்கை ஏன் அப்படி உருண்டையாக இருக்கிறது? அது எதற்காக?" என்றது.

இதற்கும் அந்த யானை பொறுமையாக பதில் கூறியது. "ஊற்றில் இருக்கும் தண்ணீரை உறிஞ்சி குடிப்பதற்காகத் தான் அப்படி இருக்கிறது!" என்றது யானை.

"சரி எல்லோருக்கும் பல் வாய்க்குள்ளே தானே இருக்கும் உனக்கு என்ன வெளியில் இருக்கிறது! அதுவுமில்லாமல் பெரிதாகவும் நீளமாகவும் இருக்கிறதே?" என்று கேட்டது பூனை.

"புலி என்னிடம் வந்து வாலாட்டினால் அந்த சமயத்தில் அதைத் தாக்குவதற்காகத்தான் இப்படி இருக்கிறது!" என்றது யானை.

இதைக்கேட்டதும் பூனை விழுந்து விழுந்து சிரித்தது.

"மலை எங்கேயாவது பாயுமா? நீயோ கறுப்பாக இருக்கும் பெரிய மலை உன்னால் எப்படி பாய முடியும்? அது முடியாத காரியம்!" என்று சொல்லி விட்டு மீண்டும் சிரித்தது.

என் உடம்பைப் பார்த்து விட்டு தானே மலையென்று சொல்கிறாய்! நான் பாய வேண்டிய அவசியம் இல்லை!இப்பொழுது உன்னை பாய வைக்கிறேன் பார்! என்று சொல்லி விட்டு அந்தப் பூனையை அலட்சியமாக தூக்கி எறிந்தது யானை!

எங்கேயோ போய் விழுந்த அந்தப் பூனை மெதுவாக எழும்பி நின்று பார்த்தது.தூரத்தில் அந்த யானை இன்னும் பொறுமையாக ஆனால் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

இப்பொழுது தான் அந்த பூனைக்கு ஞானோதயம் பிறந்தது.

"யானை பாய வேண்டிய அவசியமில்லை!அதற்கு நீளமாக தும்பிக்கை இருக்கிறது!" என்பதைப் புரிந்து கொண்டது.

"வலியாரிடம் வாயாடக்கூடாது" என்ற பாடத்தை பூனை கற்றுக் கொண்டது.இந்தக் காட்சி பாவேந்தர் பாரதிதாசன் கைவண்ணத்தில் ஒரு கவிதையாக உருவெடுத்து வருகிறது.

"இரண்டு பக்கமும் வாலா என்றது பூனை.  
எதிரி லேதும் பிக்கை என்றது யானை.  
உருண்ட துதிக்கை ஏனோ என்றது பூனை.  
ஊற்று நீரை உறிஞ்ச என்றது யானை.  
திரண்டு நீண்ட பல் ஏன் என்றது பூனை.  
சீறும் புலியைத் தாக்க என்றது யானை.  
இருண்ட மலை பாயா தென்றது பூனை.  
எடுத்தெறிந்தது பூனையைப் போய் யானை!"

இந்தக் கவிதையில் ஒரு பாடமும் இருக்கிறது,ஒரு படமும் இருக்கிறது.அதாவது இதைப் படிக்கவும் முடிகிறது,பார்க்கவும் முடிகிறது.வலியாரிடம் வாயாடக்கூடாது என்பதை சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஒருவன் அப்படித்தான் ஆற்றங்கரையில் பொறுமையாக உட்கார்ந்திருந்த இன்னொருவன் தலையில் போய்க் குட்டினான்.அவன் பார்த்தான். உடனே ஒரு ரூபாயை எடுத்து இவன் கையில் கொடுத்தான்.

அவன் சொன்னான் இந்த ஊரில் இப்படி ஒரு வழக்கம்.யார் குட்டினாலும் ஒரு குட்டுக்கு ஒரு ரூபாய் கொடுப்பார்கள் என்று பொறுமையாக சொன்னான்.

இவனுக்கு மிகுந்த ஆசை.உடனே ஊருக்குள் ஓடினான். கொஞ்சநேரம் கழித்து திரும்பி அவனிடம் ஓடி வந்தான்.

"உங்கள் பேச்சைக் கேட்டு ஊருக்குள்ளே போய் ஒரு பெரிய ஆசாமி தலையில் ஒரு குட்டு குட்டினேன்.ஆனால் அவன் உடனே என்னிடம் இருந்ததை எடுத்து என் கையிலேயே கொடுத்து விட்டான்!" என்றான்.

"என்ன பணமா?" என்றான் அவன்.

"இல்லை!பல்லு!"என்றான் இவன்.

**தென்கச்சி கோ சுவாமிநாதன்**

# தமிழ் சினிமா வரலாறு

42

## கிட்டப்பா- சுந்தராம்பாள் காதல் திருமணம்

இலங்கைக்கு வந்து நாடகங்களில் நடிக்கும்படி கிட்டப்பா சகோதரர்களுக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்று கிட்டப்பாவும் அவருடைய சகோதரர்களும் 1925 இறுதியில் இலங்கை சென்றனர்.

எஸ்.ஜி.கிட்டப்பாவும் கே.பி.சுந்தராம்பாளும் முதன் முதலாக இலங்கையில் வள்ளி திருமணம் நாடகத்தில் ஜோடியாக நடித்தனர்.

கிட்டப்பா வேலனாகவும் சுந்தராம்பாள் வள்ளியாகவும் நடித்தனர்.

இருவரும் போட்டி போட்டுப் பாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

தமிழ் நாட்டுக்குத் திரும்பிய பிறகும் கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் பல நாடகங்களில் இணைந்து நடித்தனர். அவர்கள் புகழ் திக்கெட்டும் பரவியது.

வள்ளி திருமணம் கோவலன், ஞானசவுந்தரி முதலிய நாடகங்கள் சக்கை போடு போட்டன.

பேசும் படங்கள் வராத அந்தக் கால கட்டத்தில் கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் பாடிய நாடகப் பாடல்கள் இசைத் தட்டுக்களாக வெளிவந்து மூலை முடுக்கெல்லாம் எதிரொலித்தன.

நாடகங்களில் இணைந்து நடித்ததால் கிட்டப்பாவுக்கும் சுந்தராம்பாளுக்கும் காதல் மலர்ந்தது.

கிட்டப்பா ஏற்கனவே திருமணம் ஆனவர் என்பது சுந்தராம்பாளுக்குத் தெரியும்.

எனினும் கடைசி வரை உன்னை காப்பாற்றுவேன் என்று கிட்டப்பா வாக்குறுதி அளித்ததால் அவரை மணக்க சம்மதித்தார் சுந்தராம்பாள்.



கிட்டப்பா- சுந்தராம்பாள் காதல் பற்றி அறிந்த கிட்டப்பாவின் சகோதரர் அப்பாதுரை அய்யரும் சுந்தராம்பாளின் மாமா மருக்கொழுந்துவும் கலந்து பேசி இருவருக்கும் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்தனர்.

1927 ஆண்டில் கிட்டப்பா- சுந்தராம்பாள் திருமணம் மாயவரத்தில் எளிய முறையில் நடந்தது.

இந்த தம்பதிகளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. சில நாட்களில் இறந்துவிட்டது.

இதனால் பெரும் சோகத்திற்கு உள்ளான கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் சில மாதங்கள் நாடகங்களில் நடிக்காமல் இருந்தனர்.

கடைசி வரை காப்பாற்றுவதாக சுந்தராம்பாளுக்கு கிட்டப்பா வாக்குறுதி கொடுத்தார் என்றாலும் அதை நிறைவேற்றுவது சுலபமாக இல்லை.

கிட்டப்பாவையும் சுந்தராம்பாளையும் பிரிக்க உறவினர்களும் விதியும் செய்த சதி, வெற்றி பெற்றது.

கிட்டப்பா சுந்தராம்பாளைப் பிரிந்தார். இருவரும் பிரிய நேரிட்டதற்கு இன்னொர காரணமும் அப்பொழுது கூறப்பட்டது.

கிருஷ்ணலீலா என்ற நாடகத்துக்குப் போக வேண்டாம் என்று கிட்டப்பா கூறியதாகவும் அதை மீறி சுந்தராம்பாள் அந்த நாடகத்துக்குச் சென்றதால் கிட்டப்பா கோபம் அடைந்ததாகவும் பத்திரிகைகள் எழுதின.

### கண்ணீர்க் காவியம்

பிரிந்து வாழ்ந்த கிட்டப்பாவுக்கு சுந்தராம்பாள் எழுதிய கடிதங்கள், கண்ணீர்க் காவியங்களாக விளங்கின.

24-08-1930 இல் கொடுமுடியில் இருந்து கிட்டப்பாவுக்கு சுந்தராம்பாள் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:-

தங்களைப் பிரிந்திருப்பது எனக்கு எவ்வளவு பயமாக இருக்கிறது என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 310

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

•••ஒரு பிச்சைக்காரன் தெருவில் நடந்துகொண்டிருந்த ஒருவனை நிறுத்திக் கேட்டான், இரண்டு வருடங்களுக்கு முன்பு நீங்கள் எனக்கு 20 ரூபாய் கொடுப்பது வழக்கம்.

சென்ற வருடம் முழுவதும் 10 ரூபாய்தான் கொடுத்தீர்கள், கடந்த சில மாதங்களாக நீங்கள் வெறும் 2 ரூபாய்தான் கொடுக்கிறீர்கள். ஏன்?

அவன் சொன்னான், முதலில் நான் பிரம்மச்சாரியாக இருந்தேன். பிறகு எனக்குக் கல்யாணமாயிற்று.


இப்பொழுது எனக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது, அதனால்தான்.

அந்தப் பிச்சைக்காரன் கத்தினான், என்ன! உன் குடும்பத்தை நடத்துவதற்கு என் பணத்தை உபயோகப்படுத்திக்கொள்கிறாயா?

(பலத்த சிரிப்பு)

அந்தப் பிச்சைக்காரன் சொல்கிறான், உன் குடும்பத்தை நடத்துவதற்கு என் பணத்தை உபயோகிக்கிறாயா? என்று உண்மையில் நம்மில் பலரும் இன்னொருவர் நமக்கும், நாம் தேவைகளுக்கும் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நமது பிறப்புரிமை என்றே எண்ணிக்கொண்டிருக்கிறோம். மேலும் அவற்றை நாம் வெறுமனே சாதாரணமாக எடுத்துக்கொள்கிறோம்.

இதுபோன்ற மனோபாவம் நம்மிடம் இருக்குமானால் நர்ம எவ்வளவு ஆழமான அறியாமையில் இருக்கி



றோம் என்பதை நாம் உணர்வதில்லை.

நாம் இவ்வாறு இருக்கும் பொழுது முழுக்குறைபாட்டுடன் இருக்கிறோம் என்பதைக்கூட அறிவதில்லை.

இந்த முழு மனோபாவமும் ஒரு அடிப்படையான மாற்றத்திற்குள்ளாக வேண்டும்.

உங்களுடைய சொந்தத் தந்தையோ அல்லது தாயோ அல்லது கணவனோ அல்லது மனைவியோகூட சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்பட்டுவிடக் கூடாது.

ஒருவன் வேலையிலிருந்து வீட்டிற்கு வந்து, தன் மனைவி ஒரு மோசமான மனநிலையில் இருப்பதைக் கண்டான்.

அவள் அவனை நோக்கிக் கத்தினாள், கடைசியில் நான் எப்படியோ சமாளித்து வேலைக்காரியை வீட்டு வேலையனைத்தும் அவளே செய்து விடுமாறு பழக்கியிருந்தேன்.

அவள் இப்பொழுது விட்டு விட்டுச் சென்றுவிட்டாள்! அவன் இரக்கத்துடன் கேட்டான், என்ன காரணத்திற்காக அன்பே?

அவள் சொன்னாள், நல்லது அதற்கு நீங்கள்தான் காரணம்! தொலைபேசியில் அவளுடன் பேசும்பொழுது மிகவும் மூர்க்கத்தனமாக பேசினீர்கள் என்று சொல்கிறாள்;

அவளுடைய சுய மரியாதையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று அவள் நினைப்பதால் வேலையை விட்டுவிட்டாள்.

அவன் குழப்பமடைந்து உளறினான், ஆனால் நான் உன்னுடன் பேசிக் கொண்டிருப்பதாக அல்லவா நினைத்தேன்!

(சிரிப்பு)

நாம் எப்பொழுதுமே உறவுமுறைகளைச் சாதாரணமாகவே எடுத்துக் கொள்கிறோம். அதனால் சிக்கலுக்குள்ளாகிறோம். ஒவ்வொரு தனி மனிதரையும் முழுமையின் பகுதியாக நடத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# இலங்கை கசினோ சூதாட்ட மையங்கள் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கானதே



## சுற்றுலாத்துறை பிரதிஅமைச்சர் அருந்திக பெர்னாண்டோ

**கசினோ மையங்கள், கணக்குப்பாராது அதிகளவில் பணத்தை தமது சுற்றுலாவுக்கு செலவிடும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மேலதிகமாக உள்ளீக்க வேண்டும் என சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார பிரதி அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கசினோ மையங்கள் இலங்கையில் செயற்படுவது குறித்து ஒவ்வொருவரும் வித்தியாசமான நிலைப்பாட்டை கொண்டிருக்க முடியும் என்பது எனக்குத் தெரியும். கசினோ சூதாட்ட மையங்கள் தேவை என்பதே என்னுடைய கருத்தாகும்.

கசினோ மையங்கள்பொழுதுபோக்கிற்கான மிகப்பெரியதொரு வளமாகும். இது அதிக பணத்தைச் செலவிடும் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் ஒரு கவர்ச்சியான துறையாகும்.

ஆனால் இலங்கையர்களை அதற்குள் அனுமதிக்கக் கூடாது. அவர்களுக்கு அமெரிக்கா லாஸ் வெகாஸில் செயற்படுத்துவதைப் போன்று வேறு இடங்களை இலங்கையில் ஒதுக்க வேண்டும்.

சிங்கப்பூர் அரசாங்கம் தமது மக்களுக்கு கூடுதலான கட்டணத்தை அறவிடுவதன் மூலம் தமது நாட்டு மக்கள் இதில் பங்கேற்பதை குறைத்து விட்டுள்ளது.

கசினோ கடந்த வருடம் மிகப் பெரிய பேசுபடு பொருளாக இலங்கையில் இருந்தது. அவுஸ்திரேலியாவின் கசினோ மன்னன் ஜேம்ஸ் பக்கர் கடந்த அரசினால் கசினோ திறப்பு நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தார் இதில் உள்நாட்டவர்களும் ஆர்வமாக ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் முன்னர் எதிர்க்கட்சியில் இருந்த போது இதற்கு எதிராக செயற்பட்டதுடன் சமயத்தலைவர்களையும் அக்கோரிகைக்கு ஏதுவாக திரட்டினர் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க கசினோ இலங்கையில் ஆரம்பிக்கப்படமாட்டாது என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## கடந்த இரண்டு வருடங்களில் 28000இல் இருந்து 18000 ஆக குறைந்தது கைதிகள் எண்ணிக்கை

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரை 28000 ஆகக் காணப்பட்ட சிறைக்கைதிகளின் எண்ணிக்கை தற்போது 18000 ஆகக்குறைந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் றோகண புஸ்பகுமார தெரிவித் துள்ளாா.

வீடற்றவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கொழும்பு கோமாகம பகுதியில் வீடு ஒன்றிற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை குறைவடைந்து ள்ளமை நாட்டில் குற்றச் செயல்கள் குறைவடைந்துள்ளமையைச சுட்டிக் காட்டுகின்றது.

கைதிகளில் 50 வீதமானோர் விளக்கமறியல் கைதிகளாகவே உள்ளனர். அத்துடன் குற்றச்செயல்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (3)

## நவம்பர் நடுப்பகுதியில் மோட்டார் சைக்கிள்கள்

எதிர்வரும் நவம்பர்மாத நடுப்பகுதியில் ஊடகவியலாளர்களுக்கு தீர்வையற்ற மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நேர்முகப்பரீட்சைகள் கடந்த 19ஆம் திகதி முதல் நேற்று வெள்ளிக்கிழமை வரை கொழும்பு தகவல் திணைக்களத்தில் நடைபெற்றன.

இலகு கடன் அடிப்படையில் ஊடகவியலாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்க ஊடக அமைச்சு நிதி அமைச்சுடன் இணைந்து விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. (3)

## இறக்குமதித் தீர்வை அதிகரிப்பால் உழவியந்திரங்களின் விலை அதிகரிப்பு

நான்கு சில்லு உழவு இயந்திரம் ஒன்றின் விலை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளதும் அதேபோன்று மூன்று இலட்சம் ரூபாவாகவுள்ள இரு சில்லு உழவியந்திரமும் 4 இலட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளது.

வாகன இறக்குமதியாளர்கள் மற்றும் முகவர்கள் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், புதிய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சுங்கத் தீர்வையினாலேயே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் உழவியந்திர இறக்குமதியை இடைநிறுத்த வேண்டியேற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

நான்கு சில்லு உழவியந்திரத்திற்கு 2 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் இரண்டு சில்லு உழவியந்திரத்துக்கு 75 ஆயிரம் ரூபாவும் சுங்கத் தீர்வையாக விதிக்கப்பட்டுள்ளதால் உழவியந்திரங்களின் விலையை உயர்த்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் சுங்கத் தீர்வையை குறைக்க நடவடிக்கை எடுத்தால் விவசாயிகளின் நன்மைகருதி விலைகளைக் குறைக்க முடியும் என்றும் வாகன இறக்குமதியாளாகள தெரிவித்துள்ளனர். (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 532

அமுதன்





அறிவழகன்





செல்வராகவன்




உதிஷ்டன்




தஜரூபன்



லதீப் சிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அனைத்துக் கட்சிகள் மாநாடு (APC): பேசுவதற்கு மட்டுமல்ல, தீர்வுகளுக்காகவுமே!

**சண்டேலீடர் பத்திரிகையில் "அனைத்துக் கட்சிகள் மாநாடு: பேசுவதற்கு மட்டுமல்ல தீர்வுகளுக்காகவுமே (APC)!" எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் மொழியாக்கம்....**




வாதப்பிரதிவாதங்களுக்குரிய ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றைத் தீர்மானிப்பதற்கான சிறந்த ஜனநாயக நடைமுறையொன்றினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுத்தவுள்ளார்.









அனைத்து அரசியல் கட்சிகளதும் கருத்துக்களையும் இது விடய சம்பந்தமாக கருத்திற் கொள்ளவிருக்கும் அரசாங்கம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வகிக்கும் 21 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் அவ்வித பிரதிநிதித்துவம் இல்லாத ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளையுங்கூட இதன் பொருட்டு தாம் அழைக்கவிருப்பதாக அவர் கூறினார். இந்த வழிமுறையானது, பல்வேறுபட்ட அனைத்து அரசியல் கருத்துக்களையும் வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை மட்டுமல்லாது வெறுமனே குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதிலும் பார்க்க தீர்வுகளை வழங்குவதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளையுங்கூட ஏற்படுத்திக் கொடுப்பதாகவே இருக்கும். இலங்கையர்களது மனித உரிமைகளைப் பேணிக் கொள்ளும் அதேநேரம், இலங்கை அரசியலமைப்பின் ஏற்பாட்டு விதிகளைத் தழுவியதாகவே தீர்மானங்களும் மேற்கொள்ளப்படுவதாக இருக்கும் என அவர் மேலும் கூறியிருந்தார்.

நீதியியல் சட்டப் பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கான விசேட அர்ப்பணிப்புடன் கூடிய தலைமைத்துவ அரங்கம் ஒன்றில் அனைத்துவிதமான கருத்துக்களையும் தட்டியெழுப்புவதற்கான இவ்வித சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுப்பதானது, ஐ.நா. மனித உரிமை சபையின் தீர்மானம் ஒரு துரோகச் செயலின் உருவாக்கமே என்ற ரீதியில் நோக்குவோர் அதனை வெளியரங்கப்படுத்தும் தேசாபிமானக்கடமை தமக்கு மறுக்கப்பட்டுள்ளதாக குறைகூறுவதை விடுத்து அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு தெளிவுபெற உதவும்.


கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற பாராளுமன்ற கூட்ட அமர்வுகளின் போதும் குறித்த ஓர் விடய சம்பந்தமாக பேசுவதற்கான தமது பேச்சுரிமை மறுக்கப்பட்டதாகவும் தாம் புறக்கணிக்கப்பட்டதாகவும் குற்றஞ்சாட்ட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்தைக் கவருவதற்கான வெறும் புரளிகள் என்பது அறியப்பட்ட ஒன்றேயாகும்.

இவ்விதமான கலந்துரையாடல்களுக்கு பாராளுமன்றமே மிகச் சிறந்த பேச்சரங்கமாக இருந்திருக்குமென்றாலுங்கூட துரதிர்ஷ்டவசமாக குறிப்பிடத்தக்க சிலர் அதனை குறித்த சில சந்தர்ப்பங்களில் தவறான விதத்தில் பயன்படுத்துவது எல்லோரும் அறிந்ததே. அமைதியானதும் பகுத்தறிவுக்கேற்றதுமான வாதப்பிரதிவாதங்களுக்கும் அப்பால், சிலர் அதனை முரட்டுக்காளைச் சண்டைக்கான ஒருவித மிருகக்கூண்டாக கருதிச் செயற்படுவதாகவே தோன்றுகிறது. இவ்விதமாக அமைதியான சூழலில் அமைதியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டிய கருத்துச் சுதந்திரத்திற்கான சந்தர்ப்பம் இழக்கப்படுகிறது.

இந்த அனைத்துக் கட்சி மாநாடும் (APC) முன்னர் இடம்பெற்ற மாநாடுகள் போன்ற நன்நோக்கத்துடன் கூடியதாக இருந்தாலுங்கூட முன்னையவற்றுள் சிலவற்றுக்கு சுருக்கமாக ஏற்பட்ட "புஸ்வாணம்" என்ற கதி இதற்கும் ஏற்பட்டுவிடாது நன்மையே விளையும் என்ற எதிர்பார்ப்புடன் நம்பிக்கை கொள்வோமாக! இறுதியாக இடம்பெற்ற 'திஸ்ஸ விதாரண அனைத்துக் கட்சி மாநாடு' ஏறக்குறைய இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட கடினமான ஆய்வு-ஆராய்ச்சிகளுக்குப் பின்னர் முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்திருந்தது. அதற்குப் பின்னர் அதன் உள்ளடக்கம் பற்றிய எந்தவொரு விபரமும் வெளிவிடப்படவில்லை. பொது நலன்களுக்கு பயன்பட்டிருக்க வேண்டிய எவ்வளவோ நிதிவளங்கள் வீணே விரயமானது தான் கண்ட மிச்சம்! இதுமட்டில் ஊடகங்களின் அர்ப்பணிப்புடன் கூடிய கடின அக்கறைக்கும் பலத்த அவதானிப்புகளுக்கும் செலவழிக்கப்பட்ட பாரிய பெறுமதிகள் அறியப்படாதே போயிற்று. விரயமாக்கப்பட்ட பணப்பெறுமதிக்கும் மனித உழைப்பிற்குமான பயன்தான் என்ன? என்ற உண்மை அந்த விதாரணவுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே தெரிந்த ஒன்றாக இருக்கக்கூடும்.



தற்போதைய சர்வ கட்சி மாநாட்டில் பங்கு பற்றுவோர் உளப்பூர்வமாக மனதில் உணர்ந்து கொள்ள வேண்டிய ஒரே விடயம் வருமாறு: அவர்களது பேச்சுவன்மையும் வீராவேசப் பேச்சுக்களும் எத்தகையவையாக இருப்பினும்- அவர்கள் தலைகீழாக நின்று ஆவேசக் கூத்தடித்தாலுங்கூட, ஐ.நா.மனித உரிமை சபையின் தீர்மானம் எமது முன்னைய அறிக்கைகள்- தீர்மானங்கள் போல் காற்றில் எரிந்து புஸ்வானமாகிவிடப் போவதுமில்லை! கிழித்து வீசிவிடப்படப்போவதுமில்லை! (தொடரும்)



**தமிழில். யோகர்**

# மக்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்து தீர்வு

## பிரதமர் ரணில் பணிப்பு

மக்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்து அவற்றுக்கு தீர்வு வழங்குமாறு பிரதமர் ரணில விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் வார நாட்களில் மக்கள் தங்களது பிரச்சினைகளைக் கூறி தீர்வு பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் வார நாட்களில் சிறிகொத்தவிற்கு சென்று மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொள்வார்கள்.

நேற்று முன்தினம் அமைச்சர் கபீர் ஹாசிம் மற்றும் இரான் விக்ரமரட்ன ஆகிய அமைச்சர்கள் மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டிருக்கையில் திடீரென பிரதமர் அந்த இடத்திற்கு சென்று மக்களின் பிரச்சினைகளை தாமே நேரில் கேட்டறிந்து கொண்டார்.

சுமார் ஐந்து மணித்தியாலங்கள் சிறிகொத்தவில் இருந்து மக்களின் பிரச்சினைகளை செவிமடுத்து அவற்றுக்கு தீர்வு வழங்குமாறு பணிப்புரை விடுத்த பிரதமர், மக்களுடன் மதியபோசனத்தையும் உண்டு அந்த இடத்தைவிட்டு வெளியேறியுள்ளார். (இ-7-10)

# 15 ஆயிரம் ரூபா அபராதம்

வழித்தட அனுமதியின்றிபோக்குவரத்து சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்துச் சாரதி ஒருவரை 15 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு சாவகச்சேரி நீதவான் திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரம் கடந்த புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸாரால் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட யாழ்ப்பாணம்- கொழும்பு வரையான போக்குவரத்துச் சேவையில் ஈடு பட்டுவரும் சாரதி ஒருவருக்கே இவ் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீதிமன்றத்தில் மேற்படி சாரதி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பிரகாரமே மேற்குறித்த அபராதம் விதிக்கப்பட்டதுடன் கடும் எச்சரிக்கையுடன் விடுதலை செய்யப்பட்டார் எனத் தெரிய வந்துள்ளது. (இ-5)

### வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 30.10.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 138.56 | 143.05 |
| பவுண்ட் | பிரிட்டன் | 211.40 | 219.90 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 151.08 | 157.89 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.99 | 145.51 |
| டொலர் | கனடா | 104.53 | 109.39 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 97.35 | 102.45 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.40 | 102.66 |
| யென் | ஜப்பான் | 1.1397 | 1.1904 |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 373.5990 |
| குவைத் | டினார் | 464.6357 |
| ஓமான் | ரியால் | 365.8553 |
| கட்டார் | ரியால் | 38.6936 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.5556 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.3517 |

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 320 | 250 | 350 |
| தக்காளி | 130 | 140 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 60 | 120 | 100 |
| கரட் | 80 | 60 | 110 | 60 |
| பூசணி | 60 | 50 | 80 | 40 |
| புடோல் | 100 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 160 | 120 |
| பாகற்காய் | 80 | 200 | 240 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 70 |
| பயற்றங்காய் | 120 | 100 | 160 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 50 | 30 | 60 | 50 |
| கறிமிளகாய் | 220 | 200 | 200 | – |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 60 | 80 |
| கீரை – 1 பிடி | 40 | 10 | 40 | 40 |
| தேசிக்காய் | 350 | 400 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | – | – | – |
| வெங்காயப்பூ | 180 | – | – | 200 |
| முள்ளங்கி | 40 | – | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | – | 30 | 40 |
| வல்லாரை | 10 | – | 20 | 30 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## "தமிழரசுக் கட்சி" செல்வநாயகம் தொடங்கினார் 23




...முடிவில் இரு தரப்பினரையும் சமரசம் செய்யும் நோக்கத்துடன் ஒரு தீர்மானத்தைச் செயற்குழு நிறைவேற்றியது.

மலையகத் தமிழர்களுக்குப் பிரஜா உரிமை கிடைப்பதற்கு பிரஜா உரிமைச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்ய சேனநாயக்க சம்மதித்தால் மந்திரி சபையில் இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சேரலாம் என்பதே அந்தத் தீர்மானத்தின் சாரமாகும்.

இந்தத் தீர்மானத்தைக் குணதிலகாவிடம் பொன்னம்பலம் தெரிவித்தார். பிரஜா உரிமை சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருவதில் சிரமம் ஏதும் இல்லை.

நீங்கள் முதலில் மந்திரியாகிவிடுங்கள். அதன் மூலமாக சட்டம் திருத்தம் செய்வது எளிதாகிவிடும் என்று பசப்பு வார்த்தைகள் கூறினார், குணதிலகா.

அவர் கூறியதை அப்படியே நம்பினார், பொன்னம்பலம். மந்திரி பதவி ஏற்க சம்மதம் தெரிவித்தார். 1948 டிசெம்பர் மாதத்தில் அவரை மந்திரியாக சேனநாயகா நியமித்தார். ஷ

பொன்னம்பலம் விரும்பியபடியே கைத் தொழில் கடல் சார்ந்த தொழில் ஆகிய இலாகாக்கள் அவருக்கு ஒதுக்கப்பட்டன.

அவருடைய ஆதரவாளரான கனகரத்தினதுக்குத் துணை மந்திரி பதவி கொடுக்கப்பட்டது.

### கட்சி உடைந்தது

இதைத் தொடர்ந்து இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இரண்டாக உடைந்தது.

பொன்னம்பலத்தை எதிர்த்தவர்கள் செல்வநாயகம் தலைமையில் ஒன்று திரண்டனர்.

பொன்னம்பலம் கோஷ்டியும் செல்வநாயகம் கோஷ்டியும் தனித்தனியாகச் செயற்குழு கூட்டங்களைக் கூட்டி ஒருவரை ஒருவர் நீக்கி தீர்மானம் நிறைவேற்றினர்.

செல்வநாயகம் தமிழர் வாழும் பகுதிகளை ஒன்று சேர்த்து தனி மாகாணம் ஆக்கி, சுயாட்சி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.



செல்வநாயகம்
(சட்டத்தரணி உடையில்)

தமிழர் பகுதிகளை ஒருங்கிணைத்து ஒரே மாகாணமாக அமைக்க வேண்டும். இதுபோல் சிங்களப் பகுதிகனை ஒன்று சேர்த்து மற்றொரு மாகாணம்.

இரண்டுக்கும் பொதுவான ஒரு மத்திய அரசு. மாநிலங்களில் சுயாட்சி. மத்தியில் கூட்டாட்சி. இதன் மூலமாகத்தான் தமிழர்களின் நலனைக் காப்பாற்ற முடியும் என்று அவர் கூறினார்.

இதற்காகப் புதிய கட்சி தொடங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்குச் சுயாட்சி பெற்றுத் தரும் நோக்கத்துடன் தமிழரசு கட்சியைச் செல்வநாயகம் தொடங்கினார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த ஜி.ஜி. பொன்னம்பலம், பிரதமர் சேனநாயக்கவின் அழைப்பை ஏற்று மந்திரியாகி விட்டதால் கட்சி இரண்டாக உடைந்தது.

கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவ்ராக விளங்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம், தன் ஆதரவாளர்களுடன் சேர்ந்து புதிய கட்சி தொடங்க முடிவு செய்தார்.

### வழக்கறிஞர்

செல்வநாயகத்தின் முழுப் பெயர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம். இவர் 1898 மார்ச் 31 ஆம் திகதி, மலாலாவில் உள்ள ஈப்போ நகரில் பிறந்தார். பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்.

இளம் வயதிலேயே இலங்கையில் குடியேறி தெல்லிப்பளை என்ற கிராமத்தில் ஆரம்பக் கல்வி பயின்றார். பின்னர் யாழ்ப்பாணம் செயின்ட் ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றார்.

பிறகு அதே கல்லூரியில் ஆசிரியராக வேலை பார்த்தார். பின்னர் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார்.

பிற்காலத்தில் பிரதமரான ரனில் விக்கிரமசிங்கவின் தந்தை எஸ்மண்ட் விக்கிரமசிங்க, பிரதம நீதிபதியான நெவில் சமரக்கோன் உட்பட பல முக்கிய புள்ளிகள் இவரிடம் ஜூனியர்களாகப் பணியாற்றியவர்கள். பிரிட்டிஷ் ராணியின் வழக்கறிஞர் என்றும் புகழ்பெற்றவர், செல்வநாயகம். (தொடரும்)



செல்வநாயகம்- எமிலி
திருமணத்தின்போது






# குடையும் நந்தினியும்!





**அ**து ஒரு சிறுவர் குடை.

மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட குடை.

கண்ணைக் கவரும் கிளிப் பச்சை நிறத்தில் துணி விரிப்பு, பளபளப்பான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் முட்டுக் கம்பிகள், அழகான பூண் கொண்டை, கார்ட்டூன் சித்திரம் பொறித்த கைப்பிடி என அழகாக இருந்த அதை, நந்தினியின் பிறந்த நாள் பரிசாக அப்பா வாங்கினார்.

நந்தினி, தெற்றுப்பல் தெரிய சிரிக்கும் 10 வயது சிறுமி.

அப்பா வாங்கிவந்த அந்தக் குடை, அவளுக்கு மிகவும் பிடித் திருந்தது.

குடைக்கும் நந்தினியைப் பிடித் திருந்தது. அவளோடு ஒட்டிக கொண்டது.

விற்பனைக்காகக் கடையில் இருந்தபோது, அதன் மூத்த சகா ஒன்று அடிக்கடி சொல்லும் வார்த்தைகள், குடையின் நினைவுக்கு வந்தது.

நம்மை யார் வைத்திருக்கிறார்களோ... அவரே நமது எஜமானன்.

நாம் அவருக்கு உண்மையாக நடந்துகொள்ள வேண்டும்!

இன்று முதல் இந்தச் சிறுமி எனது எஜமானி.

நான் இவளுக்கு உணமையாக இருப்பேன்' என்று நினைத்த குடைக்கு ஒரு சந்தேகம்.

தங்கள் கையில் கிடைத்த பொருள்களை அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்துப் போடுவதில் சிறுவர்களுக்கு அலாதிப் பிரியம்.

நந்தினியும் தன்னைப் பிய்த்து விடுவாளோ?

குடையின் நினைப்புக்கு முற்றிலும் மாறாக இருந்தாள் நந்தினி.

அவள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஒரு நளினம், அழகுணர்ச்சி இருந்தது.

குடையை மென்மையாகக் கையாண்டாள். முதலில், துணிமடிப்பின் பிணைப்பை விடுவிப்பாள்.

பின்னர், கைப்பிடிப் பொத்தானை மென்மையாக, போதிய விசையுடன் அழுத்துவாள்.

மலர்களின் இதழ்கள் மாதிரி குடை விரியும்.

குடையை மடக்குவதும் அப்படித்தான்.

நந்தினி வீட்டு முன்வாசலில் ஒரு வராண்டா உண்டு.

அதன் சுவற்றில், மடிக்கப்பட்ட நிலையில் குடை தொங்கும்.

ஒருநாளும் அலங்கோலமாகத் தொங்கியது இல்லை.

உடைமைகளை நேசிக்கும் சிறுமி, எனது எஜமானி' என்று நினைத்த குடைக்கு, ஆனந்தம்.


நந்தினிக்கு, ஒரு குடை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை எப்படி வந்தது?' என்று குடைக்கு ஒரு கேள்வி தோன்றியது.

நந்தினியின் வகுப்பு ஆசிரியை, தினமும் பள்ளிக்குக் குடை பிடித்துக்கொண்டு வருவார். அணிநதிருக்கும் சேலைக்குப் பொருந்தும் விதத்தில் மூன்று, நான்கு குடைகள் அவரிடம் இருக்கும்.

அதைப் பார்த்துதான் நந்தினிக்கும் குடை ஆசை தோன்றியது.

நந்தினி, வீட்டு போர்ட்டிகோவில் தோழிகளோடு ஓடிப்பிடித்து, ஒளிந்து விளையாடுவாள்.

அம்மாவோடு கதை பேசுவாள். நிலாச்சோறு சாப்பிடுவாள்.



அவள் செய்யும் ஒவ்வொரு குறும்பையும் குடை ரசிக்கும்.

இப்படி இனிமையாக இருந்த போதுதான், அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ஊரில் இருந்து நந்தினியின் பாட்டி வந்திருந்தார். நந்தினி, பாட்டியோடு கடை வீதிக்குப் போனாள்.

ஒரு கடையில் காய்கறி வாங்கும் போது, குடையை மறந்து வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள். (தொடரும்)




- ✦1803 - கப்டன் ட்றைட்பேர்க் தலைமையில் ஆங்கிலேயப் படைகள் பண்டாரவன்னியனின் படைகளைத் தாக்கினர். பலர் கொல்லப்ப்பட்டனர்.
- ✦1864 - நெவாடா ஐக்கிய அமெரிக்காவின் 36 ஆவது மாநிலமாக இணைந்தது.
- ✦1876 - இந்தியாவின் கிழக்குக் கரையில் இடம்பெற்ற மிகப்பெரும் சூறாவளி காரணமாக 200, 000 பேர் வரை இறந்தனர்.
- ✦1924 - உலக சேமிப்பு நாள் இத்தாலியின் மிலானோ நகரில் சேமிப்பு வங்கிகளின் உலக அமைப்பினால் அறிவிக்கப்பட்டது.
- ✦1931 - தமிழின் முதல் பேசும் படம் காளிதாஸ் வெளியானது.
- ✦1954 - அல்ஜீரியாவில் பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கெதிராக அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி போராட்டத்தை ஆரம்பித்தது.
- ✦1961 - ஸ்டாலினின் உடல் மொஸ்கோவில் உள்ள லெனினின் நினைவகத்திலிருந்து அகற்றப்பட்டது.
- ✦1968 - வியட்நாம் போர்: பாரிஸ் அமைதிப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வட வியட்நாம் மீதான அனைத்துத் தாக்குதல்களையும் நவம்பர் 1 இலிருந்து நிறுத்துவதாக அமெரிக்க அதிபர் லிண்டன் ஜோன்சன் அறிவித்தார்.
- ✦1969 - வோல் மார்ட் தொடங்கப்பட்டது.
- ✦1973 - அயர்லாந்தில் டப்ளின் நகர சிறை ஒன்றில் இருந்து மூன்று ஐரியக் குடியரசு இராணுவத்தினர் அங்கு தரையிறங்கிய கடத்தப்பட்ட உலங்கு வானூர்தி ஒன்றில் தப்பி வெளியேறினர்.
- ✦1984 - இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இரண்டு சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் பின்னர் புதுடில்லியில் இடம்பெற்ற கலவரத்தில் சுமார் 2000 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.
- ✦1996 - விமானம் ஒன்று பிரேசிலில் வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணஞ் செய்த அனைத்து 98 பேரும் தரையில் 2 பேரும் கொல்லப்பட்டனர்.
- ✦1999 - எகிப்திய விமானம் ஒன்று மசாசுசெட்சில் வீழ்ந்ததில்- அதில் பயணஞ் செய்த 217 பேரும் கொல்லப்பட்டனர்.
- ✦2000 - சிங்கப்பூர் போயிங் 747-400 விமானம் தாய்வானில் விபத்துக்குள்ளாகியதில் 83 பேர் கொல்லப்பட்டனர்.
- ✦2000 - வடக்கு அங்கோலாவில் தனியார் அண்டோனொவ் விமானம் வெடித்துச் சிதறியதில் 50 பேர் கொல்லப்பட்டனர்.
- ✦2003 - 22 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் மலேசியப் பிரதம மந்திரி மகதிர் பின் முகமது தமது பதவியைத் துறந்தார்.

**பிறப்புக்கள்**

- ✦1795 - ஜோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (இ. 1821).
- ✦1875 - வல்லபாய் பட்டேல், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1950)
- ✦1922 - நொரொடோம் சிஹானுக், கம்போடிய அரசர்
- ✦1930 - மைக்கேல் கொலின்ஸ், அமெரிக்க விண்வெளி வீரர்
- ✦1933 - துரை இராஜாராம், தமிழக எழுத்தாளர்

**இறப்புகள்**

- ✦1811 - பண்டார வன்னியன், வன்னி மன்னன்.
- ✦1975 - எஸ். டி. பர்மன், இந்திய இசையமைப்பாளர் (பி. 1906)
- ✦1984 - இந்திரா காந்தி, இந்தியப் பிரதமர் (பி. 1917)
- ✦1986 - ரொபேர்ட் மலிக்கென், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி. 1896)
- ✦1990 - எம். எல். வசந்தகுமாரி, கர்நாடக இசைப் பாடகர் (பி. 1928)
- ✦2003 - செம்மாங்குடி சிறிநிவாச ஐயர், இந்திய கர்நாடக இசைப் பாடகர், (பி. 1908).
- ✦2005 - அம்ரிதா பிரீதம், பஞ்சாபி எழுத்தாளர் (பி. 1919)
- ✦2005 - பி. லீலா, பின்னணிப் பாடகி

நமது உண்மை நங்கூரம் பாய்ச்சிய கப்பலைப் போல அமைதியுடன் இருக்க வேண்டும். – புத்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாங்கள்தான் போர்க் குற்றவாளிகள் இதுதான் விசாரணையின் முடிவு

இலங்கை ஆட்சியாளர்களிடம் யாரேனும் நீதியை எதிர்பார்ப்பார்களாயின் அதுவே மிகப்பெரும் மடமைத்தனமாகும்.

தமிழர்கள் என்று வந்துவிட்டால் பரம எதிரிகளாக இருக்கக்கூடிய சிங்களவர்களும் ஒன்று சேர்ந்து விடுவர். இதுவே யதார்த்தம்.

அந்த வகையில் போர்க்குற்ற விசாரணை ஏதேனும் நடந்தாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கோ அல்லது கோத்தபாய ராஜபக்ஷவுக்கோ எந்தத் தண்டனையும் வழங்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆக, போர்க்குற்றவாளிகளில் முதன்மையானவர்கள் என்று தமிழ் மக்கள் கருதுகின்றவர்களுக்கு தண்டனை வழங்கப்பட மாட்டாது என்றால், போர்க்குற்ற விசாரணை நடத்தப்படுவதனால் எந்த வித நன்மையும் தமிழ் மக்களுக்கு ஏற்பட மாட்டாது என்பது உறுதியாகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் மிகப்பெரிய இன அழிப்பு நடந்த போது இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பணியாற்றியவர் கோத்தபாய ராஜபக்ஷ.

வன்னிப் போரின் போது தமிழ் மக்கள் வாழுகின்ற இடங்களில் நடந்த அத்தனை தாக்குதல்களின் போதும் ஏகப்பட்ட தமிழ் மக்கள் உயிரிழந்தனர். இதற்கான உத்தரவுகள் பாதுகாப்புச் செயலர் ஊடாகவே வழங்கப்பட்டது.

இதுதவிர வெள்ளைக் கொடி விவகாரம் மற்றும் படையினரிடம் சரணடைந்த போராளிகள் விவகாரம் போன்றவற்றுக்கும் பதில் தரவேண்டியவர் கோத்தபாய ராஜபக்ஷ என்பது மறுக்க முடியாத உண்மை.

நிலைமை இதுவாக இருந்த போதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு எந்தத் தண்டனையும் வழங்கப்பட மாட்டாது என்று அரசு அறிவித்திருப்பதானது, போர்க்குற்ற விசாரணைகள் எவ்வாறாக அமையும் என்பதற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு தண்டனை வழங்காமல், படை அதிகாரிகளுக்கும் படையினருக்கும் தண்டனை வழங்குவதென்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

ஆக, ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூடி போர்க்குற்ற விசாரணையை நடத்துமாறு இலங்கை அரசுக்கு உத்தரவிட, இலங்கை அரசு யார் யாருக்கு தண்டனை வழங்கப்பட மாட்டாது என்பதை மிக வெளிப்படையாக அறிவித்துள்ளது.

அவ்வாறாயின் இலங்கையில் நடக்கப்போகும் உள்ளக விசாரணையில் போர்க்குற்றவாளிகளாக முன்னாள் புலிப் போராளிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுவதே நடந்தேறப் போகிறது என்பது உறுதியாகத் தெரிகிறது.

இத்தகையதொரு நிலைமையை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசு தமிழ் அரசியல் தலைமைக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை வழங்கி தமிழர்களின் எதிர்ப்புக்கு சமாதி கட்டி விட்டது.

என்ன செய்வது? தமிழினத்தின் விலை போகின்ற தலைமையும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற போக்கும் இராஜதந்திரமற்ற அரசியலும் சேர்ந்து எங்கள் இனத்தை வெறுவிலியாக்குகின்றன.

ஆன தமிழ் அரசியல் தலைமை எங்களுக்கு இருந்திருக்குமாயின் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கும்.

ஏதோ தமிழ் மக்களை கடவுள் காத்தாலன்றி மீட்சி இல்லை என்பது மட்டும் உறுதியாகின்றது.

## வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச எல்லைக்குட்பட்ட சமரபாகு (ஜே/357) எரிச்சோலைவீதி வல்வெட்டித்துறையைத் தொடுக்கும் பிரதான வீதி சுமார் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளது.

மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதோடு குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதனால் இவ்வீதி ஊடாக செல்லும்பாடசாலைமாணவர்களும்பொது மக்களும் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரதேச சபை உறுப்பினர்களினதும் கிராம பொது அமைப்புக்களதும் கவனத்திற்கு கொண்டு வந்தும் இவ்வளவு காலமும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களது கவனத்தில் கொண்டு இவ் வீதியைப் புனரமைத்து தங்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ

## மக்கள் நலன்பேணும் அமைப்பின் ஆண்டுநிறைவும் கௌரவிப்பு நிகழ்வும்

கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தலைமையில் கோண்டாவில் ஆசிமட விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்புவிருந்தினர்களாகவடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் திருமதி.தி.அன்னலிங்கம் ஆகியோரும் கௌரவ் விருந்தினர்களாக யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் பே.தனபாலசிங்கம், கிருபாலேணர்ஸ்உரிமையாளர்அகிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வரவேற்புரையினை மக்கள்நலன்பேணும்அமைப்பு ஆலோசகர் எஸ்.என். பிறேம்குமார் நிகழ்த்தவுள்ளதுடன் தலைமையுரையினை மக்கள் நலன்பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் வழங்கவுள்ளார்.

அறிமுகவுரையினை மக்கள் நலன் பேணும் அமைப்பின் போசகர் இ.அருண கிரிவாசன் நிகழ்த்தவுள்ளதுடன் ஏற்புரையினை ஞானலோஜினி சிவஞானம் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரபல சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம் கௌரவிக்கப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வடமராட்சியில் 4 நாடகங்கள் நாளை மேடையேறுகின்றன

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் செயல்திறன் அரங்க இயக்கத்தின் நான்கு நாடகங்கள் நெல்லியடியில் மேடையேறுகின்றன.

நலிந்தோர் நல நிதிக்கான நிதி சேகரிப்பையும் உள்ளூர் கலைஞர்களையும் அவர் தம் படைப்புக்களையும் ஊக்குவிப்பதையும் நோக்காக கொண்டு இந்த நாடகங்கள் வடமராட்சி மண்ணில் முதல் தடவையாக மேடையேறுகின்றன.

நாளை முதலாம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை நான்கு நாடகங்கள் மேடையேறுகின்றன.

ஈழத்தின் நவீன நாடக உலகின் தந்தையென்று குறிப்பிடப்படும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பெரியவர்கள் சிறுவர்களுக்காக நடிக்கின்ற "பஞ்ச வர்ண நரியார்" சிறுவர் நாடகம் மற்றும் தே.தேவானந்தத்தின் பெரியவர்களும் சிறுவர்களும் இணைந்து நடிக்கின்ற "சிரிப்பு மூடை" சிறுவர் நாடகம், ஈழத்து நாடக வரலாற்றில் முதல் முறையாக மேடையேற்றப்பட்ட "ஏகாந்தம்" வேடமுக நாடகம் மற்றும் மரணச்சான்றிதழ் என்ற ஓராள் அரங்கிற்காக நாடகம் அடங்கலாக நான்கு நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன.

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பெருவிருந்தாக அமையும் இந்த நாடக விழாவிற்கான நுழைவுச்சீட்டுகளை வடமராட்சி லயன்ஸ் கழகத்திடமும் மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ள முடியும். (இ)

## மர நடுகை

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் பவள ஆண்டினை முன்னிட்டு நடத்தப்படும் மரநடுகை விழா-2015, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பூனாவோடை இந்து மயானத்தில் ச.மோகனதாசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## மர நடுகை ஆரம்ப விழா செம்மணியில்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதமாக கார்த்திகை (1-30ஆம் திகதி) மாதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடக்க நிகழ்வு நாளைய தினம் காலை 8.30 மணிக்கு செம்மணி உப்பாற்கரையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வடமாகாணத்தில் சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மினசார சபை அறிவித்துள்ளது.

அந்தவகையில், 31.10.2015 இன்று சனிக்கிழமை யாழ். பிரசேத்தில் மீசாலை, அல்லாரை, வெள்ளம்பொக்கட்டி, கச்சாய் துறைமுகம், கெற்பலி ஒரு பகுதி, கச்சாய் கடற்கரை, பாலாவி, கொடிகாமம், கலைவாணி, வறணி, இயற்றாலை, மந்துவில், கரம்பைக்குறிச்சி, வறணி, கரம்பன், வலைத்தோட்டம் ஆகிய இடங்களிலும்.

வவுனியா பிரதேசத்தில் ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரைக்கும், செட்டிக்குளம் சந்தியிலிருந்து செட்டிக்குளம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் வரை, செட்டிக்குளம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், செட்டிக்குளம் வைத்திய சாலை, செட்டிக்குளம் தொலைத் தொடர்பு நிலையம் ஆசிய இடங்களிலும்.

மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத்திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், தலை மன்னார், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



தியாகத்தால் அன்றி எதையும் சாதிக்க முடியாது. மனிதன் செய்யத் தக்கனவற்றுள் மிகவுயர்ந்த மிகப் புனிதமான செயல் அதைக் கெடுக்காமலிருப்பதே.


நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்சமாட்டீர்கள். எதற்காகவும் நிற்க மாட்டீர்கள். சிங்கங்களெனத் திகழ்வீர்கள். நாம் இந்தியாவையும் உலகம் முழுவதையுமே விழித்தெழச்செய்தாக வேண்டும். கோழைத்தனம் உதவாது.

ஸ்ரீஇராமகிருஷ்ணரை வழிபடுபவர்கள் நீசர்களாக இருந்தாலும் கணநேரத்தில் பெரிய மகான் ஆகிவிடுவார்கள். பெண்களானாலும் சரி, ஆண்களானாலும் சரி.

ஸ்ரீஇராமகிருஷ்ணர் பெண்களின் ரட்சகர், பாமரர்களின் ரட்சகர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் அனைவரின் ரட்சகர். ஒவ்வொரு வீட்டிலும் ஸ்ரீஇராமகிருஷ்ணரின் வழிபாட்டைப் புகுத்துங்கள். பிராமணர், சண்டாளர், பெண், ஆண் அனைவருக்கும் அவரை வழிபடும் உரிமை உண்டு. கும்பத்தில் அவரைப் பூஜிக்கட்டும், சிலை செய்து வழிபடட்டும், மந்திரம் இருக்கட்டும் அல்லது இல்லாமல் போகட்டும். எப்படி எந்த மொழியில் யார் வேண்டுமானாலும் பக்தியுடன் அவரை வழிபடுபவர்கள் பேறு பெற்றவர்கள்.

பிரமச்சரியம் உள்ளவனது மூளையின் ஆற்றல் அளப்பரியதாகிறது. அவன் மகத்தான சங்கல்பம் உடையவன் ஆகிறான். பிரமச்சரியம் இல்லாமல் ஆன்மீக சக்தி வருவதில்லை.

# புகைப்பட நிருபர்களிடம் மன்னிப்பு கேட்ட ஹர்பஜன்



திருமண நாளன்று தர்ணாவில் ஈடுபட்ட புகைப்பட நிருபர்களிடம், மாப்பிள்ளை ஹர்பஜன் சிங் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன்சிங், தனது நீண்ட நாள் தோழியான கீதா பாஸ்ராவை நேற்று முன்தினம் திருமணம் செய்து கொண்டார்.

இவர்களது திருமணம் ஜலந்தரில் உள்ள குருத்துவாராவில் நடைபெற்றது. இந்நிலையில் வீட்டுக்கு வெளியே நடந்த வைபவத்தை அங்கு குழுமியிருந்த புகைப்பட நிருபர்கள் தங்களது கமராவில் பதிவு செய்து கொண்டிருந்தனர்.

இதனை பார்த்த சில பவுன்சர்கள் நிருபர்களை தாக்கியதுடன், அவர்களது கமராவையும் பிடுங்கி வைத்துக் கொண்டனர்.

இதனால் கோபமடைந்த நிருபரகள் தர்ணாவில் ஈடுபடவே, வெளியே வந்த ஹர்பஜன் சிங் மன்னிப்பு கேட்டார். இதுகுறித்து வழக்கு பதிவு செய்த பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நவம்பர் முதலாம் திகதி டில்லி தாஜ்பேலஸ்ஹோட்டலில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# தெ. ஆபிரிக்க தொடருக்காக தயார் நிலையில் உள்ளேன்



## புஜாரா தெரிவிப்பு

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர நவம்பர் 5 ஆம் திகதி மொகாலியில் தொடங்க இருக்கிறது. இதற்கு முன் தென்னாபிரிக்கா- இந்திய கிரிக்கெட் வாரிய பிரசிடென்ட் லெவன் அணிகளுக்கு இடையிலான இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சி ஆட்டம் தொடங்குகிறது.

இந்திய பிரசிடென்ட் லெவன் அணிக்கு புஜாரா கப்டனாக உள்ளார். இவர் தென்னாபிரிக்காவிற்கு எதிராக தன்னுடைய பட்டிங் வரிசை குறித்து கூறினார்.

அப்போது அவர் "இந்திய அணியில் நான் எந்த இடத்தில் களம் இறங்குவேன் என்று தெரியாது. ஒரு சமயம் இந்திய அணியில் இடம்பெற்றால், கப்டன் மற்றும் பயிற்சியாளருடன் கலந்து பேசி அவர்கள் எந்த இடத்தில் களம் இறக்க இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வேன். அணியின் தேவையைச் சார்ந்து நான் விளையாட தயாராக இருக்கிறேன். எல்லா வகையிலும் விளையாடுவதற்காக நான் நல்லமுறையில் தயாராக இருக்கிறேன். என்னை எந்த இடத்தில் பட்டிங் செய்ய கேட்டுக் கொண்டாலும், நான் பட்டிங் செய்ய தயாராக இருக்கிறேன்" என்றார்.

இலங்கை அணிக்கு எதிரான முதல் இரண்டு போட்டியில் சேர்க்கப்படாத புஜாரா, கடைசி போட்டியில் களமிறங்கி 145 ஓட்டங்கள் விளாசினார். ஆனால், தற்போது நடைபெற்று வரும் ரஞ்சி டிராபியில் ஐந்து இன்னிங்சில் 64 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். (க)

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து கொல்கத்தாவை வென்றது டில்லி




2-வது இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து தொடரில் நேற்று முன்தினமிரவு கொல்கத்தா சால்ட் லேக் மைதானத்தில் நடந்த 24 -வது லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் அட்லெடி கோ டீ கொல்கத்தாவும், டில்லி டைனமோசும் பலப்பரீட்சை நடத்தின. தொடக்கத்தில் இருந்தே இரு அணி வீரர்களும் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

இலக்கை நெருங்குவதும், தவறவிடுவதுமாக முதல் பாதி ஆட்டம் நகர்ந்தது. பிற்பாதியில் 80-வது நிமிடத்தில் டில்லி வீரர் சவ்விக் சக்ரவர்த்தி, எதிரணி வீரர் கவிலனை பிடித்து இழுத்ததற்காக 2-வது முறையாக மஞ்சள் அட்டை பெற்றார். இரண்டு மஞ்சள் அட்டை என்பது சிவப்பு அட்டைக்கு சமம் என்பதால் சவ்விக் வெளியேற்றப்பட்டார். இதனால் எஞ்சிய நேரம் 10 வீரர்களுடன் டில்லி அணி விளையாடினாலும், எதிராளிகளின் கையை ஓங்க விடாமல் சமாளித்தது.

வழக்கமான 90 நிமிடங்கள் முடிந்து காயம் உள்ளிட்ட விரயத்திற்காக கூடுதலாக 4 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. இதன் 3-வது நிமிடத்தில் டில்லி வீரர்கள் கொல்கத்தாவின் கோல் கம்பத்தை முற்று கையிட்டனர். அப்போது டில்லி வீரர் புளோரென்ட் மலோவ்டா தட்டிக்கொடுத்த பந்தை, சக மாற்று ஆட்டக்காரர் டாஸ் சான்டோஸ் (பிரேசில்) கொல்கத்தாவின் தடுப்பாட்டக்காரர்கள் மற்றும் கீப்பரை ஏமாற்றி இலாவகமாக கோலுக்குள் திருப்பினார். இதனால் ஒரு கணம் 41 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்ளூர் ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.

இறுதியில் டில்லி அணி 1-0 என்ற கோல் கணக்கில் கொல்கத்தாவை தோற்கடித்து 4-வது வெற்றியை பதிவு செய்தது.

காயத்தில் இருந்து மீண்ட டில்லி அணியின் நட்சத்திர வீரர் ராபர்ட்டா கார்லஸ் (பிரேசில்) ரசிகர்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் 64-வது நிமிடத்தில் மாற்று ஆட்டக்காரராக களம் புகுந்து விளையாடியது குறிப்பிடதக்கது.

தொடர்ந்து 3 ஆவது தோல்வியை தழுவிய சவுரவ் கங்குலியை உரிமையாளராக கொண்ட கொல்கத்தா அணி புள்ளி பட்டியலில் 6 ஆவது இடத்திற்கு இறங்கியுள்ளது. (க)



# பெண்களுக்கான உலக டென்னிஸ் அரை இறுதியில் ஷரபோவா

டொப்-8 வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்றுள்ள உலக பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வருகிறது. இதில் 'ரெட்' பிரிவில் கடைசி லீக் ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடந்தன. ஒரு ஆட்டத்தில் அக்னீஸ்கா ராட்வன்ஸ்கா (போலந்து), தரவரிசையில் 2-ம் நிலை வகிக்கும் சிமோனா ஹாலேப்புக்கு (ருமேனியா) 7-6 (5), 6-1 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி அளித்தார்.

ராட்வன்ஸ்காவுக்கு இது 500-வது வெற்றியாகும். மற்றொரு ஆட்டத்தில் ரஷயாவின் மரியாஷரபோவா 7-5, 6-1 என்ற நேர் செட் கணக்கில் அமெரிக்க ஓபன் சம்பியனான இத்தாலியின் பிளவியா பென்னட்டாவை தோற்கடித்தார். 'ரெட்' பிரிவில் ஷரபோவா 3 வெற்றிகளுடன் கம்பீரமாக அரையிறுதிக்குள் நுழைந்தார்.

ஹாலேப், ராட்வன்ஸ்கா, பென்னட்டா தலா ஒரு வெற்றி, 2 தோல்விகளுடன் சமநிலையில் இருந்தனர். செட் அடிப்படையில் ராட்வன்ஸ்கா அரையிறுதிக்கு தகுதி பெற்றார். ஹாலேப், பென்னட்டா வெளியேற்றப்பட்டனர். 33 வயதான பென்னட்டா ஏற்கனவே அறிவித்தபடி சர்வதேச டென்னிஸில் இருந்தும் விடைபெற்றார். (க)

# டுமினி டெஸ்ட் போட்டியில் விளையாடுவது சந்தேகம்



இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டியின்போது தென்னாபிரிக்காவின் ஓல்-ரவுண்டர் டுமினிக்கு காயம் ஏற்பட்டது. இதனால் ஏனைய இரண்டு போட்டிகளில் இருந்து அவர் விலகினார்.

இந்நிலையில் பயிற்சி ஆட்டத்தில் டுமினி விளையாடமாட்டார் என்று தென்னாபிரிக்கா கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது. இதனால் 5 ஆம் திகதி நடக்கும் முதல் டெஸ்டில் டுமினி விளையாடுவது சந்தேகம்தான் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து தென்னாபிரிக்க அணியின் ஊடக மனேஜர் கூறுகையில் "டுமினி பயிற்சி ஆட்டத்தில் விளையாடமாட்டார். மொகாலி டெஸ்டில் இடம்பெற பாதிக்குப் பதிதான் (50:50) வாய்ப்புள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

டுமினி முதல் டெஸ்டில் பங்கேற்காவிடில் அது தென்னாபிரிக்கா பின்னடைவை ஏற்படுத்தும். (க)

## அவுஸ்திரேலியாவில் தமிழ்ப் பெண் முதல்வர்



(கான்பெரா)

அவுஸ்திரேலியாவின் மோர்லன்ட் நகர முதல்வராக இலங்கையில் பிறந்த சமந்தா ரத்தினம் என்ற தமிழ்ப் பெண் கிறீன் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மோர்லன்ட் நகர முதல்வர் பதவிக்கு இடம்பெற்ற வாக்கெடுப்பில் 6-5 என்ற வாக்குகளின் அடிப்படையில் இவர் வெற்றி பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய தொழிலாளர் கட்சி செல்வாக்குச் செலுத்தி வந்த மோர்லன்ட் நகர மன்றத்தில், கிறீன் கட்சி முதல்முறையாக நகர முதல்வர் பதவியைப் பெற்றுள்ளது.

இதற்கு முன்னர் இரண்டு ஆண்டுகள் நகர முதல்வர் பதவிக்கு இடம்பெற்ற தேர்தலின் போது, சமந்தா ரத்தினம் அவுஸ்திரேலிய தொழிலாளர் கட்சியிடம் தோல்வியடைந்திருந்தார்.

இலங்கையில் பிறந்த இவர் வன்முறைகளால் 1987ஆம் ஆண்டில் அங்கிருந்து வெளியேறி ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகளில் வாழ்ந்த பின்னர், 1989ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் குடியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# வறுமையில் இருக்கும் மக்களை என்னுடைய ஆட்சியில் மீட்பேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(மாத்தறை)

சுதந்திரத்தின் பின் இந்நாட்டில் உருவாகிய ஜனாதிபதிகள் நாட்டினதும் நாட்டு மக்களினதும் தேவையின் நிமித்தம் ஒவ்வொரு யுகத்திலும் முக்கியத்துவம்வாய்ந்த பொறுப்புக்களை மேற்கொண்டதைப் போன்றே தனது ஆட்சிக் காலத்தில் நாட்டு மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுக்கும் பொறுப்பினை தான் நிறைவேற்றுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பஸ்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் மக்களுக்காக "ரண்பிம" 4000 காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்காக நேற்று முற்பகல் மாத்தறை ஊறுபொக்க நகரத்தில் இடம்பெற்ற வைபவத்தின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றுள்ள அமைதியானதும் சுதந்திரமானதுமான நாட்டில் பாரிய சவாலாக வறுமை காணப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றுடன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான சந்தர்ப் பத்தினையும் நாட்டு மக்களுக்கு வழங்குவது புதிய அரசின் நோக்கமென அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களின் வறுமையை இல்லாதொழிப்பதில், காணிப் பிரச்சினையை தீர்த்து வைப்பது முன்னிலை வகிக்கின்றது எனச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, புதிய காணிக் கொள்கையினை அறிமுகம் செய்து மக்களின் காணி உரிமையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

காணி உரிமையினை மையமாகக் கொண்டே அன்று வறியவர் பணக்காரர் என்ற பாகுபாடு ஆரம்பிக்கப்பட்டது என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, சனத்தொகை பெருக்கத்துடன் உருவாகும் காணிப் பிரச்சினையைப் போன்றே உள்நாட்டு உணவு உற்பத்திச் செயல்



முறையில் எழுந்துள்ள சவால்களுக்கும் புதிய காணிக்கொள்கையின் ஊடாக தீர்வு காணக்கூடியதாயிருக்குமென நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டில் வறுமையை இல்லாதொழிப்பது போன்றே இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதாரம் ஆகியவற்றை பலப்படுத்துவதற்கும் ஊழல் மோசடிகள் அற்ற அரச நிறுவனங்களை பேணிச் செல்வதற்கும் புதிய அரசு தன்னை அர்ப்பணித்துள்ளதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (எ-11)

## கைகலப்பில் ஒருவர் சாவு கந்தரோடையில் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் இரு உறவினர்களுக்கு இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கல்லெறியாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவர் 46 வயதுடைய இரத்தினம் தயாபரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ். கந்தரோடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இருவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வாய்த்தகராறு தீவிரமடைந்து, ஒருவருக்கொருவர் கற்களை வீசி எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது ஒருவர் எறிந்த கல்லானது மற்றையவரின் தலையைப்பதம் பார்த்ததையடுத்து, அவர் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## ஆறு சட்டமூலங்களில் சபாநாயகர் கையொப்பம்

(கொழும்பு)

இலங்கையின் 8-வது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 6 சட்டமூலங்களில் சபாநாயகர் கரு ஜயசூரிய கையெழுத்திட்டுள்ளார்.

சபாநாயகர் நேற்று முற்பகல் அவற்றில் கையெழுத்திட்டதாக அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய வருமான வரி திருத்தச் சட்டமூலம், தேசத்தை கட்டியெழுப்பும் வரி திருத்தச் சட்டமூலம், பந்தயம் மற்றும் சூதாட்ட வரி திருத்தச் சட்டமூலம், பொருளாதார சேவைகள் வரி திருத்தச்சட்டமூலம், பெறுமதி சேர் வரி திருத்தச்சட்டமூலம், மற்றும் நிதிச் சட்டமூலம் ஆகியவற்றிக்கு சபாநாயகர் கையெழுத்திட்டுள்ளார்.

சபாநாயகராக பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக கரு ஜயசூரிய இந்த சட்டமூலங்களில் கையெழுத்திட்டுள்ளார்.

சபாநாயகர் கையெழுத்திட்ட பின்னர் இந்த சட்டமூலங்கள் செல்லுபடியான சட்டங்களாக அமுல்படுத்தப்படும். (எ-11)

## மீண்டும் கிராம உதயம்

(கொழும்பு)

கிராம உதயம் வேலைத்திட்டம் மீண்டும் செயற்படுத்தப்பட்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நாடு முழுவதும் 38 கிராமங்களை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஒரு கிராமத்தில் 25 வீடுகள் என இந்த காலப்பகுதியில் நாடு முழுவதும் 950 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

2016-ம் ஆண்டு 200 கிராமங்கள் நிர்மாணிப்பதே அமைச்சின் நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குடியிருப்பு பிரச்சினைகளுக்கு தீர்வாக மூன்று கட்டங்களாக கிராம உதயம் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## மனித உரி...

ப்பை ஏற்படுத்திக்கொண்டுள்ளன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் தலைவர் ஆரியவங்ச திசாநாயக்க மற்றும் உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் ஆகியோர் இந்த அமைப்பில் ஒருங்கிணைப்பாளர்களாக உள்ளனர்.

இந்நிலையில் தங்கள் கல்விக்கு உரிய அங்கீகாரம் வழங்கக் கோரிய பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் நேற்று முன்தினம் மேற்கொண்ட காட்டு மிராண்டித்தனமான தாக்குதலை ஜாதிக பலய வன்மையாகக் கண்டித்துள்ளது. (எ-11)

## இணைய சுதந்திர விடயத்தில் இலங்கை சாதகமான நிலை

(கொழும்பு)

இணைய சுதந்திர விடயத்தில் இலங்கை சாதகமான திசையில் நகர்வதாக பிறீடம்ஹவுஸ் என்ற சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட அமைப்பு இணைய சுதந்திரம் தொடர்பாக 65 நாடுகளை ஆய்விற்குட்படுத்தியுள்ளது. இந்த ஆய்வுகள் மூலம் இணைய சுதந்திரம் தொடர்ந்து ஐந்தாவது வருடமாக வீழ்ச்சியடைந்து வருவது தெரியவந்துள்ளதாக குறிப்பிட்ட அந்த அமைப்பு இலங்கை, சம்பியா ஆகிய இரு நாடுகள் மாத்திரம் இதற்கு விதிவிலக்கு எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக 4 முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக பிரீடம்ஹவுஸ் தெரிவித்துள்ளது.

2015 ஜனவரியில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டமை, பல இணையத்தளங்கள் மீண்டும் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டமை, மனித உரிமை மீறல்கள் குறைவடைந்துள்ளமை, டிஜிட்டல் ஊடகங்களின் மூலமாக செயற்பாடுகள், மக்கள் பங்களிப்பு ஆகியவை அதிகரித்தமை ஆகியனவே இந்த மாற்றங்கள் என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (எ-11)

## மாணவர்கள் மீது தாக்குதல் கண்டித்து ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

தேசிய கணக்கியல் மாணவர் களின் ஆர்ப்பாட்டத்தின் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் தாக்குதலை கண்டித்து நேற்று பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து பல்கலைக்கழக மாணவர்களின் இந்த ஆர்ப்பாட்டங்கள் தெஹிவளை, கண்டி, காலி மற்றும் கேகாலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

இதன்காரணமாக குறித்த இடங்களில் பாரிய வாகன நெரிசல் நிலையும் ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பிரதமர் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கு மாறு சிவில் பாதுகாப்பு அமைச் சிடம் அவசரமாக பணித்துள்ளார்.

இதேவேளை ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம் காரணமாக, விஜேராம சந்தியிலிருந்து ஹைலெவல் வீதி வரை பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ-11)

## மதத் தலைவர்களுடன்...

தற்போதுள்ள சவால்களை வெற்றிகொள்வதற்கு சகல மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழுவொன்றை நியமிப்பதற்கு இதன்போது ஜனாதிபதி யோசனை தெரிவித்ததுடன், 25 பேர்களைக் கொண்ட சர்வமத சபையொன்றினை நியமிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

நாட்டில் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியின் தலைமையில் அரசு மேற்கொண்டுள்ள வேலைத்திட்டத்தினை மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் இவ்வேலைத்திட்டத்தை முழு உலகிற்கும் முன்மாதிரியான ஒன்றாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியால் முடிந்துள்ளதெனவும் தெரிவித்தனர்.

அரசு என்ற ரீதியில் சகலரும் ஒன்றிணைந்து சவால்களை எதிர்கொள்ள வேண்டுமெனவும் அதில் உள்ள சிக்கல் தன்மைகளை கருத்திற்கொண்டு நாட்டின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அவசர தீர்வுகாணும் அதேநேரம், நீண்டகால தேசிய நல்லிணக்கத்தினை உறுதி செய்யும் ஒரு வேலைத்திட்டத்தின் தேவைபற்றி தாம் அவதானம் செலுத்துவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இச் சந்திப்பின் போது கோட்டை மகா சங்க சபையின் சங்கைக்குரிய கலாநிதி இத்தபானே தம்மாலங்கார தேரர், பானகல உபதிஸ்ஸ தேரர், பிரகம்னவத்த சீவலி தேரர், கீனீயாவல பாலித்த தேரர், மற்றும் கருதினால் மல்கம் ரஞ்ஜித ஆண்டகை உள்ளிட்ட கிறிஸ்தவ மதத் தலைவர்கள் மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## யாழில் தொற்று...

பெப்ரவரி மாதம் 13 பேரும், மார்ச் மாதம் 17 பேரும், மே மாதம் 51 பேரும், யூன் மாதம் 53 பேரும், யூலை மாதம் 95 பேரும், செப்டெம்பர் மாதம் 83 பேரும், (ஒக்டோபர் மாதம் 24-ம் திகதி வரை 65 பேரும்) அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கடந்த மாதங்களிலும் பார்க்க மழைக் காலம் ஆரம்பிக்கின்ற மாதங்களில் வயிற்றுழைவால் பாதிப்படைந்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது.

இதேபோல் வயிற்றோட்டம் என்ற சந்தேகத்தின் பேரில் இவ்வருடம் மட்டும் 3ஆயிரத்து 629 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த செப்டெம்பர் மாதத்தில் மாத்திரம் 635 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது ஏனைய மாதங்களை விட மிகக் கூடுதலான தொகையாகும். ஆகவே தற்போது மழைக் காலம் ஆரம்பித்துள்ள நிலையில் இவ்வாறான நோய்கள் அதிகரித்திருப்பது வழமையாகும்.

குடிநீருக்குள் அசுத்தமான நீர் சேருவதனால் அதனை அப்படியே பொதுமக்கள் பருகுவதனால் வயிற்றோட்டம் சம்பந்தமான நோய்களுக்குள்ளாகின்றனர்.

ஆகையினால் பாதுகாப்பான வகையில் நீரினை கொதிக்க வைத்து ஆறிய பின்னர் பருகுவது நல்லதாகும் என அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ-4)

## ஏழு மணி நேர...

எதிரில் நேற்று முன்தினம் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையாகியிருந்தார்.

சட்டத்தரணிகளுடன் அவர் நேற்று முன்தினம் முற்பகல் 10.00 மணியளவில் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழு காரியாலயத்திற்கு சென்றிருந்தார்.

எனினும், ஏழு மணித்தியாலங்கள் அங்கு காத்திருந்த போதிலும் வாக்குமூலம் எதுவும் பதியப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நானும் எனது சட்டத்தரணிகளும் அன்று முழு நாளும் இங்கு காத்திருந்தோம். எனதும எனது சட்டத்தரணிகளினதும் கால நேரம் விரயமாகியது.

இது மிகப் பெரிய உளவியல் பாதிப்பாகும். தொடர்ச்சியாக இவ்வாறுசெய்வது என்னிடம் பழிவாங்கும் நோக்கிலாகும். வெறுமனே எனது காலத்தை விரயமாக்குகின்றனர்.

இப்போது இவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். நான் செய்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அல்ல விசாரணை நடத்தப்படுகின்றது. என்னுடன் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் கிடையாது. எனினும் நான் தொடர்ச்சியாக ஆணைககுழு எதிரில் பிரசன்னமாகின்றேன்.

பிரச்சினை என்னவென்றால் எனது கால நேரம் விரயமாகின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் விசாரணைக்குழுவின் பணிகள் நிறைவடைந்த தன் பின்னர், வெளியேறிய போது அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். (எ-11)

## முஸ்லிம்களு...

வுப் பொறிமுறைமையில் முஸ்லிம் மக்களின கரிசனைகளும் உள்ளடக்கப்படும் என அவர உறுதியளித்துள்ளார். அமைச்சுக்கள் அரசாங்க நிறுவனங்கள் ஆகியனவற்றை இணைத்து தீர்வுத்திட்டம் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக நாளாந்தம் கஷ்டங்களை அனுபவித்து வரும் முஸ்லிம் இடம்பெயர் மக்களின பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும்.

முஸ்லிம் மக்களினது பிரச்சினைகளுக்கு மட்டுமன்றி தமிழ் மற்றும் சிங்கள சமூகத்தவரின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் 48 மணித்தியால கெடுவில் வெளியேற்றப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாகும் நிகழ்வில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்துள்ளார்.

சுமார் 75ஆயிரம் முஸ்லிம்களை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியேற்றியிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை சில தமிழர்கள் விமர்சனம் செய்வதாகவும், பெரும்பான்மையானவர்கள் நியாயப்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், பெரும்பான்மையான முஸ்லிம்கள் இன்னமும் தங்களது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாது நெருக்கடிகளை எதிர நோக்கி வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## ஜனாதிபதி மைத்...

மிடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60-வது ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விழாவில பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை முதலாம் திகதி தாய்லாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள் ளார்.

இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டதைக் குறிக்குமுகமாகவும் இலங்கை மற்றும் தாய்லாந்துக்கிடையிலான சமய உறவுகளைப் பலப்படுத்தும் முகமாகவும் மஹியங்கனை ரஜமஹாவிகாரையிலிருந்து புனித தந்தம் எடுத்துச் செல்லப்பட்டு தாய்லாந்து புத்தமொந்தோனில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

நவம்பர் மாதம் 02 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும் இந்த நிகழ்வு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வை புத்தசாசன அமைச்சு, பௌத்த விவகார திணைக்களம் மற்றும் மஹியங்கனை ரஜமஹாவிகாரையவும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன. (எ-11)

## முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ் முஸ்லிம்கள் விடுதலை புலிகளினால் வெளியேற்றப்பட்டு இன்றுடன் 25 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நேற்றைய தினம் ஜூம்மா தொழுகையின் பின் முஸ்லிம் மக்கள் மேற்கொண்டனர்.

இப்போராட்டமானது சின்ன முகையதீன் ஜூம்மா பள்ளிவாசலில் இடம்பெற்ற தொழுகையின் பின் ஆரம்பமாகி ஐந்து சந்திப்பகுதியில் நிறைவடைந்தது.

இதன் போது போராட்டக்காரர்கள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தங்களது பிரச்சினையை ஆராய முன்வர வேண்டும் என்கின்ற முக்கிய கோஷங்களை முன்வைத்ததை அவதானிக்க முடிந்தது. (எ-4-9)

## அனைவருக்கும்...

வரும், ஜனதா சேவக கட்சியின் ஸ்தாபகத் தலைவருமான சோமவன்ஸ அமரசிங்க, இது தொடர்பில் நேர்காணல் ஒன்றை சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த நேர்காணலில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமரசிங்க,

போரின் கடைசிக்கட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் இழப்பீடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆனால் இது அநியாயமான நடைமுறையாகும்.

1983-ம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டுப போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதே சரியான நடைமுறையாகவும், நியாயமானதாகவும் இருக்கும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் சிங்கள மக்களுக்கும் இழப்பீடு வழங்கி நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் சோமவன்ஸ அமரசிங்க தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (எ-12)

## பல்கலைக்கழக...

த்துக்கு பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு பிரதிப்பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது" அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் பல்கலைக்கழக மாணவியொருவர் கீழே விழுந்திருக்கும் நிலையில் அவரை அண்மித்து நிற்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு கையில் தடியும், மறுகையில பெட்டன் பொல்லும் ஓங்கிப் பிடித்துக் கொண்டு நிற்பது முதல் பெட்டன் தடி குறித்த மாணவியின் தலையைப் பதம் பார்க்கும் வரையான புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இதனையே கீழே விழுந்திருந்த மாணவி எழுந்திருக்க பொலிஸார் உதவி செய்துள்ளதாக பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஊடகங்களும் இந்த விடயத்தில் பொறுப்பின்றி பொய்யான தகவல்களைப் பரப்புவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, ஜனாதிபதி மைத்திரிக்கு மிகவும் நெருக்கமானவர். யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த பூஜிதவை மைத்திரி தான் ஜனாதிபதியானவுடன் கொழும்புக்கு வரவழைத்திருந்தார். அத்துடன் தனது ஆட்சிக்காலத்தில் பூஜிதவை பொலிஸ் மா அதிபராக்கும் முனைப்புடன் மைத்திரி செயற்பட்டு வருவது பகிரங்கமான ரகசியமாகும். (எ-11)

## மக்களின் கோரி...

களையும் நாங்கள் விரைவிலே தீர்க்க முடியுமென வடக்கு மாகாண முதலமைச்சர் க. வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண சபையும், மன்னார் மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த குறை நிவர்த்தி நடமாடும் சேவை தட்சனா மருதமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த நடமாடும் சேவை பல்வேறு விதமான நன்மைகளை ஏற்படுத்தியுள்ளது. எங்களையும் மக்களையும் ஒன்று சேர்த்து மக்களின் பிரச்சினைகளை நேரடியாக அவதானிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. வழக்கமாக ஏற்படுகின்ற தாமதங்களையும் குறைத்துள்ளது.

ஒருவர் வந்து தனது பிரச்சினையை எங்களிடம் தெரிவித்தால் அதனை நாங்கள் செயலாளருக்கு அனுப்பி செயலாளர் அது தொடர்பில் உரிய கிராம அலுவலகரினூடாக அதனை அறிந்து இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனை எமக்கு சமர்ப்பிக்க சுமார் இரண்டு மாதங்களாகின்றது.

தாமதத்தினையும், மக்களின் சிரமங்களையும் தவிர்ப்பதற்காக நாங்கள் இப்படிப்பட்ட நடமாடும் சேவையினை மேற்கொள்கின்றோம்.

எங்களுடைய நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை ஏற்படுத்தவும் இதனைச் செயகின்றோம்.

இல்லை என்றால் ஏதோ காரணங்களுக்காக சில விடயங்களை நாங்கள் கிடப்பில் வைத்து விட்டு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காது சில நேரங்களில் இருக்கின்றோம்.

அவ்வாறன நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக அனைத்து அலுவலகர்களையும் ஒன்றினைத்து செயற்படுகின்ற போது இப்படிப்பட்ட விடயங்களை உடனுக்குடன் தீர்த்து வைக்க முடிகின்றது.

மக்களுக்கு பதில் கூற வேண்டிய ஒரு கடப்பாட்டை நாங்கள் நிறைவு செய்கின்றோம் என்றார். (எ-11)

## புலிகளின் பெய...

நான் விடுதலைப் புலி உறுப்பினர் எனில் என்னை கைது செய்திருப்பார்கள். புலிகள் அமைப்பின் பெயரைச் சொன்னாலே கடந்த அரசாங்கம் மாத்திரமல்ல, இந்த அரசாங்கமும் என்னை ஒரு விநாடியேனும் விட்டு வைக்காது.

நான் புலி உறுப்பினர் அல்ல. புலிகள் என் மீது தாக்குதல் நடத்தினர். என்னுடைய சகோதரரை படுகொலை செய்தவர்கள் அவர்களே. எங்களது கட்சி காரியாலயத்தையும் புலிகள் தீக்கிரையாக்கினர்.

எங்களது கட்சியினூடாக தமிழ் மக்களின கோரிக்கைகள் சாதாரணமானது என்ற விடயத்தை வலியுறுத்தி வருகின்றோம்.

புலிகளின் கோரிக்கைகளுக்கும் எங்களது வேண்டுகோளுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது.

அப்படியாயின் இந்த நாட்டில் பல புலி உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சம்பந்தன் மற்றும் மனோ கணேசன் எல்லோரும் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் எனக் கூறமுடியுமா?

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை பேணியிருந்தால் என்னால் இன்று இவ்வாறு இருக்க முடியுமா என குறிப்பிட்டார். (எ-11)

## வெலே சுதா மீண்...

எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பிரபல போதைப்பொருள் விற்பனையாளர் வெலே சுதா வழங்கிய தகவலுக்கு அமைய பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் விற்பனையாளரான மொஹமட் சித்திக் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

குருவிட்ட சிறைச்சாலையில் இருந்து சித்திக் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார். (எ-11)

## ஆணைக்குழு...

தொடர்பிலான விசாரணைக்காக முன்னாள் ஜனாதிபதி அழைக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதவிர சுயாதீன தொலைக்காட்சியின் உள்ளக கணக்காய்வு அதிகாரியிடமும் நேற்று வாக்குமூலம் பதிவுசெய்யவுள்ளதாக பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (எ-11)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
வல்வெட்டித்துறை 0776697960
இன்னும் 1 நாளில் பதிவுகள் நிறைவடைகின்றன.
அலுவலர்களின் நன்மை கருதி இரவு 8 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.